வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 | 20.06.2024 புதன்கிழமை | இதழ் : 172 | பக்கங்கள் : 12




## இலங்கையின் வறுமை நிலை சில ஆண்டுகளுக்கு தொடரும்!

### ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர்



ஜெனிவா, ஜூன் 20

இலங்கையின் தற்போதைய வறுமை நிலை அடுத்த சில ஆண்டுகளுக்கு தொட ரும் என்று ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை அரசாங்கம் கடைப்பிடிக்கும் பொருளாதார கட்டுப்பாடுகளின் பாதகமான விளைவுகளாலேயே இந்த நிலைமை ஏற்படும் என்றும் அவர் (11)

## நயினை அம்மனுக்கு இன்று தேர்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பெருந் திருவிழா கடந்த 7ஆம் திகதி (11)

## எதிர்காலத்தில் மிகப்பெரிய புவிநடுக்கம் ஏற்பட வாய்ப்பு

### கலாநிதி பிரதீபராஜா தெரிவிப்பு


யாழ்ப்பாணம், ஜூன் 20

இலங்கையின் அனைத்து பகுதிகளும் எதிர்காலத்தில் மிகப்பெரிய புவிநடுக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பை கொண்டுள்ளன என்று யாழ். பல்கலைக் கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பதிவு ஒன்றை அவர் தனது சமூகவலைதளத்தில் (11)

# முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட படை தலைமையகங்கள் அகற்றம்!

## 27,496 ஏக்கர் நிலம் இன்னும் படைகள் வசம்



கொழும்பு, ஜூன் 20

**முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட படைத் தலைமையகங்களின் பெயர்கள் நீக்கப்பட்டதுடன், அவற்றுக்கான படை முகாம்களும் அகற்றப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட தலைமையகங்கள் யாழ்ப்பாணம், வன்னி படைத் தலைமையகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன என்று பி. பி. சி. இணையம் தெரிவித்துள்ளது.**

போர் காலத்தில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவு என நான்கு படைத் தலைமையகங்கள் செயல் பட்டன. இவற்றுக்கென தனியான படை முகாம்கள் அவற்றை நிர்வகிக்க தனியான தளபதிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே முல்லைத்தீவு, கிளிநொச்சி படை தலைமையகங்கள் கலைக்கப்பட்டு வன்னி, (11)

## வவுனியாவில் நிலநடுக்கம்!

வவனியா, ஜூன் 20

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு 11. 02 மணிக்கு சிறியளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

மதவாச்சி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இந்த சிறிய நிலநடுக்கம் பதிவானது. இது 2.3 ரிக்டர் என்ற அளவில் பதிவானதாக தேசிய புவிச்சரிதவியல் மற்றும் கனிமவள பிரிவு உறுதிப்படுத்தியது.

இந்த நிலநடுக்கம் புவிமேற்பரப்பிலிருந்து 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட (11)

## இன்று வருகிறார் ஜெய்சங்கர் திருமலைக்கும் செல்கின்றார்!



கொழும்பு, ஜூன் 20

இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இன்று வியாழக்கிழக்கிழமை இரண்டு நாள் அதிகாரபூர்வ பயணமாக இலங்கை வருகிறார்.

இவரின் பயணத்துக்கான ஏற்பாடுகள் பாதுகாப்புடன் செய்யப்பட்டுள்ளன என்று புதுடில்லி அறிவித்துள்ளதுடன், இலங்கையில் எஸ். ஜெய்சங்கர் செல்லும் இடங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அமைச்சர் ஜெய்சங்கர் (11)

## நீர்வேலியில் விபத்து சிறுவன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 20

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிராக்டருடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் சிறுவன் ஒருவர் சம பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் நீர்வேலியில் இடம்பெற்றது. இதில், புத்தூர் கிழக்கை சேர்ந்த கலைப்பிரியன் (வயது 17) என்பவரே உயிரிழந்தார்.

நீர்வேலி - வில்லுமதவடி பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்தவர், கைதடியில் மின்னொளியில் (11)




## ஊடகவியலாளர்கள் நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

ஊடகவியலாளரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தி வாகனங்களுக்கு தீ மூட்டிய சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் (11)

## மோடியின் இலங்கை வருகை ஜெய்சங்கர் கலந்துரையாடுவார்!

கொழும்பு, ஜூன் 20

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகை தொடர்பில் இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் முக்கிய கலந்துரையாடல் நடத்தவுள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இந்திய ஊடகமான 'தி இந்து' வுக்கு இந்தத் தகவலை வழங்கியுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் (11)

## தீவிர அரசியலிலிருந்து ஓய்வு பெறுகிறார் மகிந்த?



கொழும்பு, ஜூன் 20

பொதுஜன பெரமுனவின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அரசியலில் இருந்து ஓய்வு பெறவுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி, அவர் எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட (11)

## ஊடகவியலாளரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்திய மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 20

ஊடகவியலாளரின் வீட்டின்மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டின்கீழ் மூவர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி - பத்தமேனியிலுள்ள ஊடகவியலாளர் த. பிரதீபனின் வீட்டின்மீது கடந்த (11)

## ஆனைக்கோட்டையில் இன்று அகழ்வாராய்ச்சி!

யாழ்ப்பாணம், ஜூன் 20

பெருங்கற்காலப் பண்பாட்டை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கக்கூடிய வகையிலான சான்றுகள் கிடைக்கப் பெறும் என்று கருதப்படும் ஆனைக்கோட்டையில் அகழ்வாராய்ச்சி பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தெரிவித்தார். (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

பயனற்ற மகன் ஒருவன் தன் தந்தையின் விருப்பத்துக்கு மாறாகவே எப்போதும் செயல்பட்டு வந்தான். இதனை உணர்ந்த அவனின் தந்தை இறக்கும் தறுவாயில் படுக்கையில் இருக்கும்போது, தன் விருப்பத்துக்கு மாறாகத்தான் மகன் செயல்படுவான் என்று எண்ணி மகனிடம், "மகனே, நான் இறந்ததும் ஏதாவது ஓர் நீர் நிலையில் என் உடலை அடக்கம் (புதைத்து) செய்துவிடு" என்று வேண்டிக் கொண்டான்.

தான் இப்படி கேட்டதால், தன்னைத் தரையில்தான் தன் மகன் புதைப்பான் என்று மனதில் நினைத்துக் கொண்டார் அந்த அப்பாவித் தந்தை. ஆனால், அந்த உதவாக்கரை மகனோ, "வாழும் போதுதான் நான் என் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றத் தவறிவிட்டேன். அவர் இறந்த பிறகாவது நான் அவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்" என்று எண்ணி, அவர் இறந்ததும் தங்கள் சொந்த மண்ணில் ஒரு சிறிய குளத்தை உருவாக்கி அதனுள் தன் தந்தையின் பிணத்தை போட்டு விட்டான்.

இந்தக் கதைதான் அந்தச் செய்தியை அறிந்தபோது ஞாபகத்துக்கு வந்தது.

எப்போதும் அண்ணனும் தம்பியும் போலவே செயல்படும் அந்த இரண்டு எம். பிக்களும் அண்மையில் ஜனாதிபதியை சந்தித்திருக்கின்றனர். இதுவரை காலமும் தமிழ் மக்கள் எதனை விரும்புகிறார்களோ அதற்கு மாறாகவே எதையாவது செய்துகொண்டு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி வந்த அவர்கள் இருவரும் ஜனாதிபதியை சந்தித்து விடுத்துள்ள கோரிக்கை வரவேற்கத்தக்கதுதான்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள எதிரணி தலைவர்கள் இருவருமே தமிழ் மக்களிடம் பதின்மூன்றாவது திருத்தத்தை நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளனர். இந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதியும் அவ்வாறே உறுதியளித்திருக்கிறார். பொலிஸ் அதிகாரம் இல்லாமல் என்று சொல்லியிருந்தாலும், அவரும் அது தொடர்பாக உறுதியளித்திருக்கிறார்.

ஆனால், எதிரணியில் உள்ள இருவரும் இனி ஆட்சிக்கு வந்தால் செய்வதாகவே தெரிவித்திருக்கின்றனர். அவ்வாறுதான் தெரிவிக்கவும் முடியும். ஆனால், தற்போது அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதியும் தமிழ் மக்களிடம் வந்து தனக்கு வாக்களித்து தன்னை பதவியில் இருத்தினால் பதின்மூன்றை அமுல்படுத்துகிறேன் என்று சொல்வது ஒரு வகையில் நகைச்சுவையானது.

அதிகாரத்தில் இருந்த இந்த இரண்டு வருடங்களில் அவர் ஏன் அதனை செய்யவில்லை என்ற கேள்வி தமிழ் மக்கள் இடத்தில் எழுவதைத் தவிர்க்க முடியாதல்லவா? அதனால், இதனை சுட்டிக்காட்டிய அந்த எம்.பிக்கள் இருவரும், ஜனாதிபதியை எஞ்சியிருக்கும் இந்த மூன்று மாதங்களுக்குள் செய்யக்கூடிய விடயங்களை செய்யுமாறும் அது ஒரு நல்லெண்ண முயற்சியாக இருக்கும் என்றும் ஜனாதிபதிக்கு எடுத்துச் சொன்னார்கள் என்று நம்பகமாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி இது தொடர்பான முயற்சிகளை எடுக்கின்றபோது எதிரணியில் உள்ள சஜித் பிரேமதாஸவோ அல்லது அநுரகுமார திஸநாயக்கவோ (அவரிடம் மூன்று எம். பிக்கள்தான் பாராளுமன்றத்தில் இருந்தாலும்கூட) அதனை எதிர்க்க முடியாதல்லவா? ஆக, ஜனாதிபதி அதற்கான முயற்சியை எடுத்தால் எதிரணியின் ஆதரவோடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதாகவும் அது பதிவுசெய்யப்படும் அல்லவா?

முதலில் மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றால், பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தை பாராளுமன்றில் நிறைவேற்ற வேண்டும். இதேபோல, பதின்மூன்றிலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் பதின்மூன்றில் சேர்ப்பதற்காக தனித்தனியான சில சட்டங்களையும் தயாரிக்க வேண்டியிருக்கும்.

ஏற்கனவே, ஒரு தன்னார்வ அமைப்பு அதற்கான சட்ட வரைவுகளை தயாரித்திருந்ததோடு அதுபற்றி தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் விளக்கிக்கூறி அவர்களின் ஆதரவை கோரியிருந்தது. சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த அந்தத் தன்னார்வ அமைப்பின் பிரதிநிதிகளை இந்த ஊர்க்குருவியும் சந்தித்து அவர்களின் முயற்சி தொடர்பாக அறிந்திருந்ததுடன், அதுபற்றி அப்போதே இந்தப் பத்தியிலும் எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அரசியல் என்பது சாத்தியங்களை நடைமுறையில் சாத்தியமாக்குவது என்று ஈழநாடு அடிக்கடி தனது ஆசிரியத் தலையங்கத்தில் வலியுறுத்தி வந்திருக்கின்றது. இதுவரை சாத்தியமான எதனையும் செய்யாமல் சாத்தியமாகாத விடயங்களிலேயே காலத்தைக் கடத்திய நமது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இப்போதாவது சரியாக சிந்திக்கத் தொடங்கியிருப்பது சற்று ஆறுதலைத் தருகின்றது.

ஆனாலும், இந்த விடயங்களை செய்தால், தமிழ் மக்களின் ஆதரவை பெறமுடியும் என்ற நம்பிக்கையை இந்த இரண்டு எம். பிக்களால் மாத்திரம் ஜனாதிபதி ரணிலுக்கு ஏற்படுத்திவிட முடியுமா என்பது தெரியவில்லை. இந்த விடயத்தில் அனைத்துத் தமிழ் எம். பிக்களும் ஒன்றுபட்டு முயன்றால் மாத்திரமே அது சாத்தியமாவதற்கு சந்தர்ப்பம் ஏற்படலாம்.

இன்று இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்திக்கும்போதும் தமிழ் தரப்புகள் ஒரே கோரிக்கையை முன்வைக்கவேண்டும். அதைவிடுத்து வழக்கம்போல நடைமுறைக்கு சாத்தியமில்லாத விடயங்களை பேசுவதால் யாருக்கும் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களிடமிருந்து பெறக்கூடியதைப் பெற்றுவிடவேண்டும் என்று இங்கே எழுதுவதற்காக யாராவது அது தமிழ் பொதுவேட்பாளருக்கு எதிரானது என்று கிளம்பிவிடாதீர்கள். அது எப்போதோ முடிந்த முடிவு. தமிழ் மக்கள் தமது வேணவாவை வெளிப்படுத்தும் முயற்சி அது.

- ஊர்க்குருவி.

## நீதி கோரி ஊடகர்கள் போராட்டம்




ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதமாக அவரின் வீட்டின்மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்கு நீதி கோரி வடக்கு ஊடகவியலாளர்கள் நேற்று யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக நடத்திய போராட்டத்தில்...! (படங்கள் ஐ. சிவசாந்தன்)

## ஆரோக்கிய நடைபயணம் சிறப்புற நிறைவுபெற்றது!

வடமராட்சி, ஜூன் 20

இலங்கையை சூழ்ந்துள்ள பொருளாதார வளங்களை கொண்டுள்ள நீலக்கடல் வளங்களை விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து நவீன முறையில் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில் கனடா ஈகுருவி மற்றும் புதிய வெளிச்சம் அமைப்பும் இணைந்து மேற்கொண்ட ஆரோக்கியத்துக்கான நடைப் பயணம் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை வெளிச்ச வீட்டு முன்றலில் இருந்து ஆரம்பமானது.

பருத்தித்துறையில் ஆரம்பமான நடைப் பயணம் சுப்பர்மடம் - இன்பருட்டி - சக்கோட்டை - திக்கம் - பொலிகண்டி ஊடாக வல்வெட்டித்துறையை அடைந்ததும் அங்கு காலை உணவு பரிமாறப்பட்டது.

தொடர்ந்து, தொண்டைமானாறு - வளலாய் - மயிலிட்டி ஊடாக மாவிட்டபுரத்ததை அடைந்தது. அங்கு மதிய உணவு வழங்கப்பட்டது. தொடர்ந்து மாதகல் சிவன்கோவிலை அடைந்ததும் நடைபயணம் நிறைவடைந்தது. அங்கு வவுனியா கலை இலக்கிய மன்றத்தால் கடற்றொழிலால் இலங்கை பொருளாதாரத்தை உயர்த்துவோம் என்ற கருப்பொருளில் விழிப்புணர்வு வீதி நாடகம் நடைபெற்றது.

இந்த நடைபயணத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். (ஐ-02)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

"இலங்கை அரசியலில் சிவில் சமூகம் எனப்படுவோர் என்னதான் செய்கிறார்கள்?" என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கே. கே. எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் தொடக்கவுரையை ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கம் ஆற்றுவார். கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறையின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி எஸ். ஜீவசுதன், இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தின் முன்னாள் இலங்கை நிர்வாக சேவை அலுவலரும் சமூக அரசியல் ஆய்வாளருமான செல்வின் றேனியஸ் ஆகியோர் வழங்குவர். (ஐ)

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 20

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண்முக விலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது.

இதில், நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் சி. கா. கமலநாதன் "சீகர மூர்த்தியான கந்தன்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

## திருவாசகம் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 20

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசக சிறப்பு சொற்பொழிவு நடைபெறுகிறது.

8ஆவது முறையாக நடைபெறும் சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பன்னாலை சிவபூதவராயர் ஆலய பிரதான மண்டபத்தில் மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து நடைபெறும்.

சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச. நவநீதன் "மாணிக்கவாசகரும் திருவம்மானையும்" என்ற தலைப்பில் ஆற்றுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.06.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 06
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல் முதிர்ச்சி அவசியம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்னும் பெயரில் இயங்கி வரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முஸ்லிம் மக்களும் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றது. முஸ்லிம் மக்களின் அரசியல் அணுகுமுறைகளை விளங்கிக் கொண்டிருக்கும் எவருமே இவ் வாறானதொரு கோரிக்கையை முன்வைக்க மாட்டார்கள். இதேபோன்று மலையக மக்களை நோக்கியும் இவ்வாறான கோரிக்கை ஒன்றை முன்வைக்க முடியாது. ஏனெனில், இவ்வாறான கோரிக்கை ஒன்றை தமிழ் மக்கள் மத்தியில் முன்வைப்பதும் அடிப்படையிலேயே தவறானது. கடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களின்போதும் காங்கிரஸ் பகிஷ்கரிப்பு கோரிக்கையையே முன்வைத்திருந்தது. ஆனால், அதனை தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காங்கிரஸ் அணியினர் இந்த முயற்சியை எதிர்த்து செயல்பட்டு வருகின்றனர். அதேபோன்று, எம். ஏ. சுமந்திரனும் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கடுமையாக எதிர்த்து செயல்பட்டு வருகின்றார். தமிழ் அரசுக் கட்சியில் சிறீதரன் தலைமையிலான அணியினர் பொது வேட்பாளரின் முக்கியத்துவத்தை புரிந்து செயல்பட்டுவரும் நிலையில் சம்பந்தன், சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் தமிழ் பொது வேட்பளார் நிலைப்பாட்டை எதிர்த்து செயல்பட்டு வருகின்றனர்.

ஆனால், இவ்வாறு எதிர்த்து செயல்பட்டு வருபவர்கள் மறுபுறம் தமிழ் மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பதை வெளிப்படையாகக்கூறும் துணிவற்றவர்களாகவும் இருக்கின்றனர். வேட்புமனு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் முடிவை அறிவிப்பதாக கூறுவதானது. ஒருவகையில் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றும் செயலாகவே அமையும். கடந்த காலத்திலும் இவ்வாறான தவறுகளே நடைபெற்றிருக்கின்றன.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப் பாட்டை எதிர்த்து தோற்கடிப்பதில் சுமந்திரன் அணி மற்றும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தரப்பு ஆகிய இருவருமே ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகவே தொழிற்பட்டு வருகின்றனர். ஏன் இந்தளவுக்கு இதனை எதிர்க்க வேண்டும்? இதனால் இவர்கள் சாதிக்கப் போவது என்ன? தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போகும் உச்சபட்சமான நன்மை என்ன? இந்தக் கேள்விகளை முன்வைத்து பொதுவெளியில் உரையாட எவருமே தயாராக இல்லை. பகிஷ்கரிப்பை முன்வைக்கும் காங்கிரஸ் அணியோ ஒற்றையாட்சிக்குள் நடக்கும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதாகக் கூறுகின்றது. ஆனால், ஆறாவது திருத்தச் சட்டத்தின் கீழ் சத்தியப்பிரமாணம் செய்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றது.

உண்மையில், ஜனாதிபதித் தேர்தல் பகிஷ்கரிப்பை ஓர் எதிர்ப்பு வடிவமாகக் கொள்வதாயின் அதனை அரைகுறையாக மேற்கொள்ளக் கூடாது. முழுமையாக பிரயோகிக்க வேண்டும். ஒற்றையாட்சி கட்ட மைப்புக்குள் இருக்கும் எந்தவொரு விடயத்திலும் பங்குகொள்ளாது - எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்க வேண்டும். அது ஒரு மக்கள் போராட்டமாக அல்லது இரகசிய ஆயுத அமைப்பு வடிவமாக மட்டுமே இருக்க முடியும்.

ஆனால், ஒற்றையாட்சிக்கு உட்பட்டு அனைத்திலும் பங்கு கொண்டு விட்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பளாரை எதிர்ப் பதானது அடிப்படையிலேயே ஓர் அரசியல் முதிர்ச்சியற்ற அணுகு முறையாகும். இதுவும் தமிழ் மக்களை முட்டாளாக்கும் முயற்சிதான். மறுபுறம் - ஏற்கனவே ஆணை பெற்றுவிட்டோம் - மீண்டுமோர் ஆணை எதற்கு என்னும் அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளரை எதிர்த்து களமிறங்கி யிருக்கிறது சுமந்திரன் அணி. இங்கு, ஆணை பெறுவது பற்றி எவருமே பேசவில்லை. தவிர, அப்படியே பெற முயற்சித்தாலும் அது தவறான ஒன்றல்ல. ஏனெனில், 1976ஆம் ஆண்டுக்கு பின்னரான தலை முறை எதற்காக முன்னைய ஆணைக்குக் கட்டுப்பட வேண்டும்? சுமந்திரன் போன்றவர்களிடம் பதிலிருக்கின்றதா? அரசியலை முதிர்ச்சியு டன் அணுக முன்வர வேண்டும்.

# கிளிநொச்சி விவசாயிகளின் பல ஏக்கர் நெல் வயலை நாசம் செய்த யானைகள்




கிளிநொச்சி, ஜூன் 20

கிளிநொச்சி - மகிழங் காடு கமக்காரர் அமைப்பு பகுதிகளில் நேற்று முன் தினம் இரவு புகுந்த காட்டு யானைகள் விவசாயிகளின் பல ஏக்கர் வயல் நிலங்களை நாசம் செய்துள்ளன.

விதைத்து ஒன்றரை மாதங்களேயான பயிர்களையே யானைகள் அழித் துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக காட்டு யானைகளால் தமது நெல் வயல்கள் அழிவடைவதாகவும், உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தமக்கு யானைவேலிகளை அமைத்து தருமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுகின்றனர். (அ)

# நானாட்டான் டிலாசால் கல்லூரியில் சர்வதேச யோகா தின சிறப்பு நிகழ்வு



மன்னார், ஜூன் 20

சர்வதேச யோகா தினத்தையொட்டி நேற்று "பெண்கள் வலுவூட்டல்களுக்கான யோகா" எனும் கருப்பொருளில் மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரியில் சர்வதேச யோகா தின நிகழ்வு இடம் பெற்றது.

டிலாசால் கல்லூரி மைதானத்தில் நேற்று மிக வும் சிறப்பாக நடைபெற்ற குறித்த யோகா நிகழ்வில் இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் சாய் முரளி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மேலும் , யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரி நாகராஜன், நானாட்டான் டிலாசால் கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் மனோ, நானாட்டான் பிர தேச செயலாளர் கனகாம் பிகை சிவசம்பு ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (அ)

# நாட்டில் 58,304 பேருக்கு இரட்டைக் குடியுரிமை

கொழும்பு, ஜூன் 20

2015 மற்றும் 2020 இற்கு இடையில் இலங்கையில் 58,304 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

காலி மாவட்ட சபை உறுப்பினர் கயந்த கருணாதிலக எழுப்பிய கேள்விக்கு பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பாராளுமன்றத்தில் வழங்கிய பதிலில் இது தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் அவர் தெரிவிக் கையில்-

இரட்டைக் குடியுரிமை கோரி விண்ணப் பித்தவர்களின் எண்ணிக்கை 63,917ஆக அதிகரித்துள்ளது.

மேலும், 2015ஆம் ஆண்டில், இதற்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 17,126 ஆகவும், குடியுரிமை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 16,184 ஆகவும் உள்ளது.


2016ஆம் ஆண்டில் இரட்டைக் குடியுரிமைக்காக 14,802 விண்ணப்பங்கள் சமர்ப்பிக் கப்பட்டுள்ளன. அவர்களில் 13,933 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள் ளது.

2017 இல் 9,549 விண்ணப்பங்களும், 2018 இல் 9,750 விண்ணப்பங்களும் சமர்ப் பிக்கப்பட்டன. அதன்படி, 2017 இல் 8,881 மற்றும் 2018 இல் 8,747 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டில், விண்ணப்பங்களின் எண்ணிக்கை 8,702 ஆகவும், வழங்கப்பட்ட எண்ணிக்கை 7,405 ஆகவும் உள்ளது.

மேலும் 2020 ஆம் ஆண்டில், 3,988 விண் ணப்பதாரர்கள் மற்றும் 3,154 பேருக்கு குடியுரிமை வழங்கப்பட்டது - என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 20 வியாழக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 06
நல்ல நேரம் : 10.30 - 11.30
ராகு காலம் : 01.30 - 03.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வீட்டிலும். கணுக்கால் வலிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் ஈகோ அதிகரிக்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**இடபம்**
உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். உயரதிகாரிகள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உயர் அதிகாரி உங்களை மதித்துப் பேசுவார்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். தைரியம் கூடும்.

**துலாம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் ஊழியர்களிடம் கனிவாக நடந்து கொள்ளுங்கள். புது சலுகைகள் கிடைக்கும். நிம்மதியான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பது நல்லது. அலைச்சல் அதிகரிக்கும்.

**தனுசு**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். பணிகளை போராடி முடிப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மகரம்**
குடும்பத்ினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். இனிமையான நாள்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும். மதிப்புக் கூடும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

# மத்தியில் ஆட்சி மாற்றம் மிகவிரைவில் நடக்கும்!

## கனிமொழி எம். பி.

தூத்துக்குடி, ஜூன் 20

மத்தியில் விரைவில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என நம்புகிறேன். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் - இவ்வாறு கூறியுள்ளார் தி. மு. கவின் பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி.

தூத்துக்குடி தொகுதியில் வெற்றி பெற்ற அவர் கோவில் பட்டி சட்டசபை பகுதிகளில் மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது கருத்துரைத்த அவர், மகளிர் உரிமைத் தொகை விடுபட்ட மகளிருக்கு பரிசீலனை செய்து வழங்கப்படும் என முதல்வர் உத்தரவிட்டு உள்ளார். விரைவில் விடுபட்டவர்களுக்கு மகளிர் உரிமைத் தொகை கிடைக்கும்.

மத்தியில் மீண்டும் மோடி தலைமையிலான ஆட்சி வந்து விட்டது. ஆகையால் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. மத்தியில் விரைவில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என நம்புகிறேன். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் - என்றார்.

(ஐ)

# விக்கிரவாண்டி இடைத்தேர்தல் தி. மு. க. வேட்பாளர் வேட்புமனு

விக்கிரவாண்டி, ஜூன் 20

விக்கிவாண்டி இடைத்தேர்தலில் தி. மு. க. கூட்டணி சார்பில் போட்டியிடும் அன்னியூர் சிவா நேற்று வேட்புமனுவை தாக்கல் செய்தார்.



விழுப்புரம் - விக்கிரவாண்டி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி காலமானதை அடுத்து அந்தத் தொகுதி வெற்றிடமானது. இந்தத் தொகுதிக்கு எதிர்வரும், ஜூலை 10ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த இடைத்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமானது. நாளையுடன் வேட்புமனுத் தாக்கல் நிறைவுபெறுகிறது.

இடைத்தேர்தலில் 4 முனை போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அ. தி. மு. க. கட்சி இடைத்தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்தது. இதனால், மும்முனை போட்டியே இடம்பெறவுள்ளது.

இதில், தி.மு.க. கூட்டணி சார்பில் அன்னியூர் சிவா, பா. ஜ. க. கூட்டணி சார்பில் பா. ம. க.வின் சி. அன்புமணி, நாம் தமிழர் கட்சி சார்பில் டாக்டர் அபிநயா ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அ. தி. மு. க. கூட்டணிக்கு விஜய் வந்தால் நல்லதுதான்

மதுரை, ஜூன் 20

நடிகர் விஜய் அரசியலுக்கு வந்த பின்னர்தான் அவருடைய கொள்கை செயல்பாடுகள் தெரிய வரும். விஜய் அ. தி. மு. க. கூட்டணிக்கு வந்தால் நல்லதுதான் என்று கூறியுள்ளார் அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினரான செல்லூர் ராஜூ.

மதுரையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

அ. தி. மு. க. தலைவர்களும், தொண்டர்களும் எப்போதும் தேர்தலை கண்டு அஞ்சுவதில்லை. தி.மு.க. தேர்தலுக்கு தேர்தல் புதுப்புது உத்திகளை கண்டுபிடித்து அதனை செயல்படுத்தி வருகிறது. தி.மு.க.வினர் வாக்காளர்களை கவர்வதற்காக பல்வேறு உத்திகளை கையாண்டு பணத்தை வழங்குகிறது.

எம். ஜி. ஆர். போல சம்பாதித்த பணத்தை மக்களுக்கு கொடுக்க நினைக்கிறார் நடிகர் விஜய். எனவே, நடிகர் விஜய் எனும் இளைஞர் அரசியலுக்கு வருவதை வரவேற்கிறோம். நடிகர் விஜய் அரசியலுக்கு வந்த பின்னர்தான் அவருடைய கொள்கை செயல்பாடுகள் தெரிய வரும்,. நடிகர் விஜய் அ. தி. மு. க. கூட்டணிக்கு வந்தால் நல்லதுதான். கூட்டணி பேச்சு எல்லாம் எடப்பாடி பழனிச்சாமி முடிவு செய்வார் - என்றார்.

# கலைஞர் கனவு இல்லம்; திட்டம் ஜூலை ஆரம்பம்

சென்னை, ஜூன் 20

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தை அடுத்த மாதம் தொடங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், இந்த 2024-25ஆம் நிதியாண்டில் ஒரு வீட்டுக்கு ரூ. 3.10 இலட்சம் என்ற அளவில் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட ரூ. 3,100 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பயனாளர்களை தெரிவு செய்யும் பணியை வரும் 25ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜூலை 10ஆம் திகதிக்குள் வீடு கட்டும் பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# பா. ஜ. க. வளர்ச்சி தமிழகத்தில் அபரிமிதமானது

சென்னை, ஜூன் 20

தமிழகத்தில் பா. ஜ. கவின் வளர்ச்சி அபரிமிதமாக உள்ளது. தமிழக பா. ஜ. க. தலைவராக அண்ணாமலை சிறப்பாக செயல்பட்டு வருகிறார் என்று அந்தக் கட்சியின் இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பா. ஜ. கவுக்கு இடமில்லை என அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் பதிலளித்து செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழகத்தில் பா. ஜ. க. எந்தஅளவு வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை மக்கள் கண்கூடாக பார்த்துக் கொண்டு வருகிறார்கள். தமிழகத்தில் பா. ஜ. கவின் வளர்ச்சி அபரிமிதமாக உள்ளது. தமிழக பா. ஜ. க. தலைவராக அண்ணாமலை சிறப்பாக செயல்பட்டு வருகிறார்.

தங்களுடைய குடும்பத்தை தவிர வேறு யாரும் வயநாட்டில் களம் காணக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையை குறைக்க மாபியாக்கள் தடை!

## வெதுப்பக உரிமையாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 20

**மக்கள் நலன் கருதி, பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு, வர்த்தக மாபியாக்கள் இடையூறாக இருப்பதாக, அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.**

ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கோதுமை மா, தேங்காய் எண்ணெய், முட்டை உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளுக்கு தேவையானப் பொருட்கள், அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இது, எமது தொழிற்துறையைப் பாரியளவில் பாதித்துள்ள நிலையில், வெதுப்பக உற்பத்திகளின் விலையைக் குறைக்க முடியாதுள்ளது.

கோதுமை மாவின் விலையை, மேலும் 30 ரூபாவினாலும், முட்டை ஒன்றின் விலையை 20 ரூபாவினாலும் குறைக்க முடியும்.எனினும், வர்த்தக மாபியாக்கள் அதில் இலாபம் ஈட்டும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

எனவே, இது தொடர்பில் விளக்கமளிப்பதற்கு சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் என். கே.ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார். (அ)

# மதுபான வரி அதிகரிக்கும்?

கொழும்பு, ஜூன் 20

மதுபானம், புகையிலை மற்றும் விளையாட்டு நிறுவனங்களுக்கு அறவிடப்படும் வர்த்தக வருமான வரி 40 சதவீதத்தில் இருந்து 45 சதவீதமாக அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் அண்மைய அறிக்கைக்கு அமைய, அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் அடுத்த மாதத்திற்குள் தொடர்ச்சியான வரி மாற்றங்கள் இலங்கையில் அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தொடர்பான இரண்டாவது மதிப்பாய்வை அடுத்து சர்வதேச நாணய நிதியம் பல முக்கிய வரி சீர்திருத்தங்களை கோடிட்டு காட்டியுள்ளது.

இதன்படி டிஜிற்றல் சேவையுடன் தொடர்புபட்ட துறைகளிற்கும் வற் எனப்படும் பெறுமதி சேர் வரியை அறவிடுதலும், ஏற்றுமதி சேவைகளிற்கு தற்போது விதிக்கப்படும் வருமான வரியில் விலக்களிக்கப்படுவதும் முக்கிய திருத்தங்களாக கருதப்படுகின்றன.

இதுதவிர விற்பனைச் செயற்பாடுகளுக்கு அறவிடப்படும் சமூக பாதுகாப்பு வரிக்கு பதிலாக பெறுமதி சேர் வரி அறவிடப்படக் கூடும்.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கைக்கு அமைய, இவ்வாறான பல புதிய வரிகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுலாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# பதவி விலகுமாறு ஜனாதிபதி அறிவிப்பு விடுக்கவில்லை!

## நீதியமைச்சர் விஜயதாச



கொழும்பு, ஜூன் 20

தம்மை பதவி விலகுமாறு ஜனாதிபதி அறிவிப்பு எதனையும் விடுக்கவில்லை என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சர் பதவியிலிருந்து விலகுமாறு விஜயதாச ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளதாக சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் ரோஹன லக்ஷ்மன் பியதாச, கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை தொடர்பு கொண்டு வினவியபோது- ரோஹண லக்ஷ்மன் பியதாசவின் கருத்தை முற்றாக நிராகரிப்பதாக தெரிவித்தார்.

தம்மைப் பதவி விலகுமாறு ஜனாதிபதி அறிவிப்பு விடுக்கவில்லை எனவும் நீதியமைச்சர் விஜயதாச தெரிவித்தார். (அ)

# மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்துக்கு எதிரான வழக்கு ஓகஸ்ட் 2ஆம் திகதி பரிசீலனைக்கு

கொழும்பு, ஜூன் 20

மன்னார் - விடத்தல்தீவில் அதானி நிறுவனம் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி பரிசீலிப்பதற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

விஜித் மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் குமுதினி விக்ரமசிங்க ஆகிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அடங்கிய குழாமினால் நேற்று முன் தினம் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வனஜீவராசிகள் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்பு சங்கம் உட்பட பல தரப்பினரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மத்திய ஆசிய வான்பரப்பில் தெற்கு பயணப்பாதையில் வருடாந்தம் 15 மில்லியன் பறவைகள் சஞ்சரிக்கும் முக்கிய கேந்திரப் பகுதியாக இலங்கை காணப்படுவதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திற்கு பருவகாலத்தில் சுமார் ஒரு மில்லியன் பறவைகள் வருவதாகவும், இந்த பாதையில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், பறவைகளின் நடமாட்டத்தில் குறிப்பிடத்தக்க இடையூறு ஏற்படும் எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காற்றாலை திட்டத்திற்கு அரசியல் மற்றும் வெளிப்புற காரணிகளின் அடிப்படையில் மன்னார் தீவு தெரிவு செய்யப்பட்டதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த தீவை தெரிவு செய்வதற்கு விஞ்ஞான ரீதியான அல்லது வேறு விசேட காரணம் எதுவும் இல்லை எனவும், குறித்த நிலப்பரப்பு மிகவும் உணர்திறன் மிக்க சுற்றுச்சூழல் பிரதேசம் எனவும் மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய விசாரணையின் போது இந்திய அதானி நிறுவனம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ரொமேஷ் டி சில்வா ஆஜரானதுடன் மனுதாரர்கள் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன ஆஜரானார்.

சட்டமா அதிபர் சார்பில் கலாநிதி அவந்தி பெரேரா முன்னிலையாகியிருந்தார். (அ)

# 142 எம்.பிக்களுடன் இருந்த சு.கவில் இப்போது இரு எம்.பிக்கள் மட்டுமே!

## கிண்டலடிக்கிறார் மகிந்த அமரவீர

கொழும்பு, ஜூன் 20

142 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்ட சுதந்திரக் கட்சி தற்போது இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களாக குறைந்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரும் சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா அணியின் பிரதித் தலைவருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சிறிசேனவின் தலைமையின் கீழ் கட்சி சீரழிந்ததன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நேரிட்டதாக அமரவீர குறிப்பிட்டார்.

திஸ்ஸமஹாராமவில் நடைபெற்ற இளைஞர் விவசாய தொழில்முனைவோர் கிராமத் திட்டத்தின் ஓர் அங்கமாக இளம் தொழில்முனைவோருக்கு இலவச கோழிக் குஞ்சுகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு



கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமரவீர மேலும் கூறுகையில்-

சு.க இப்போது எங்கள் கைகளில் உள்ளது. பயனற்ற கூறுகள் இனி எங்கள் கட்சியில் இல்லை. முன்னாள் தலைவரின் ஆட்சியின் கீழ், சுதந்திரக் கட்சி துண்டு துண்டாக உடைந்தது, கட்சி ஆதரவாளர்களுக்கு எங்கள் மீது நம்பிக்கை இல்லை. 142 எம்.பிக்களுடன் முன்னாள் தலைவர் சிறிசேனவிடம் ஒப்படைத்த சு.க., வெறும் இரண்டு எம்.பி.க்களுடன்தான் முடிந்தது. முன்னாள் ஜனாதிபதி குமாரதுங்க, கட்சி அழிக்கப்படுவதை சகித்துக்கொள்ள முடியாததால் சிறிசேனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தார்.

சு.கவுக்கு அதிகமான தலைவர்கள் இருப்பதாக சிலர் கூறுகின்றனர். உண்மையில் சுதந்திரக் கட்சிக்கு சட்ட ரீதியாக நியமிக்கப்பட்ட ஒரே ஒரு தலைவர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆவார். நாங்கள் எப்போதும் சட்டத்திற்கு உட்பட்டு செயல்படுகிறோம், சட்டவிரோத செயல்களில் ஈடுபட மாட்டோம். இதனால்தான் எங்களின் நியமனங்களுக்கு எதிராக முன்னாள் தலைவர் கோஷ்டியை சேர்ந்த யாரும் வழக்கு தொடரவில்லை. சுதந்திரக் கட்சி இப்போது சட்டரீதியாக எங்களின் கட்டுப்பாட்டில் உள்ளது-என்றார். (அ)

# குருந்தூர் மலை விவகாரத்தில் மீண்டும் இனவாதத்தை கையிலெடுக்கும் தெற்கு!

## கந்தையா சிவனேசன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூன் 20

சிங்கள பேரினவாதம் சார்பிலே போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு எந்த ஒரு தீர்வையும் வழங்கப்போவதில்லை என வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் கந்தையா சிவனேசன் தெரிவித்தார்.

மீண்டும் தேர்தலுக்காக இனவாதத்தைக் கையிலெடுக்கும் செயற்பாடுகளை குருந்தூர் மலை விவகாரம் ஊடாக தென்னிலங்கை வேட்பாளர்கள் மேற்கொள்ளக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே தமிழ் மக்கள் இந்த விவகாரத்தில் உறுதியாக இருக்கவேண்டும் என்பதுடன், பறிபோகும் நிலங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இத்தேர்தலில் போட்டியிடவுள்ள மூன்று வேட்பாளர்களும், யுத்தத்தை ஆதரித்தவர்கள், யுத்தம் நடக்க காரணமாக இருந்தவர்கள். அதாவது தமிழ் மக்களின் இன அழிப்புக்கு காரணமாக இருந்தவர்கள் என்றுதான் கூறவேண்டும்.

இப் பிரதேசத்திற்கு மிகிந்தலையில் இருந்து யாத்திரை வருவதனை பிழையான விடயமாக கருதவில்லை. தமிழ் பிரதேசத்திலிருந்து கதிர்காம கந்தனை வழிபடுவதற்காக யாத்திரை செல்கின்றோம். ஆனால் இங்கே வருபவர்களது யாத்திரை வெறுமனே வழிபாட்டுக்கான யாத்திரையாக நாம் கருதவில்லை, இது இப்பிரதேசத்திலே இருக்கும் மக்களுக்கு ஒரு பதட்டமான சூழ்நிலையை ஏற்படுத்துவதே நோக்கம்.

அத்துடன், குருந்தூர் மலையின் தொன்று தொட்ட வரலாற்றில் இந்த பிரதேசம் ஆதிசிவன் ஐயனார் ஆலயமாக மக்களால் தொடர்ச்சியாக பூசிக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் மிக அண்மை காலங்களாக இப்பிரதேசத்தில் பதற்றமான சூழ்நிலையே நிலவி வருகின்றது.

அத்துடன், குருந்தூர் மலை விவகாரத்தில் மிகிந்தலையில் இருந்து யாத்திரைகள் மேற்கொள்ளப்படும் விடயமானது தேர்தலை அடிப்படையாகக் கொண்ட பின்னணியில் மேற்கொள்ளப்படுகிறது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்களும் தேர்தலை பகிஷ்கரிக்கவேண்டும்!

## கோருகின்றார் கஜேந்திரன் எம்.பி.



அம்பாறை, ஜூன் 20

**தமிழ் மக்கள் மாத்திரமல்ல வடக்கு- கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களும் எதிர்கால தேர்தலை ஒற்றுமையாக பகிஸ்கரிக்கவேண்டும் என்பதே எமது கருத்தாகும்.**

**என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.**

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் முஸ்லீம் தலைவர்கள் ஒன்றுபடவேண்டும் என்பது ஆரோக்கியமான விடயமாகும். கடந்த மூன்று ஆண்டு காலமாக பாராளுமன்றத்தில் எமது கட்சி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்த விடயத்தை வலியுறுத்தி வருவதுடன் வெளியிடங்களிலும் கூறி வருகின்றார். இந்த ஒன்றுபடுதல் என்பது நிரந்திரமாக தமிழ் பேசும் மக்களின் நலன்கள் உள்ளிட்ட நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படவேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை இந்நாட்டில் எதிர்கொண்டிருக்கின்றார்கள். இதற்கு காரணம் ஒற்றையாட்சி அரசாங்கம் தான். பெரும்பான்மையாக அதிகாரம் ஒரு சாரார் வசம் இருக்கின்றபோது தமிழ் பேசும் மக்கள் அழிக்கப்பட்டிருக்கின்றார்கள். தமிழ்-முஸ்லிம் மக்களிடையே பிளவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறான பிளவுகள் எதிர்காலங்களில் ஏற்பாட கூடாது எனின் ஒற்றையாட்சி ஒழிப்பை மேற்கொள்ள ஹக்கீம் எம்.பி நடவடிக்கை எடுக்க வேண்டும். சமஷ்டி அரசியலமைப்பை இந்த நாட்டில் கொண்டு வர அவர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இவ்வாறான நிலைப்பாட்டை எடுத்து அதன் பின்னால் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒன்றிணைவினை மேற்கொண்டால் தான் அர்த்தமுள்ளதாக இருக்கும். மாறாக ஒற்றுமை என்ற வார்த்தை பிரயோகம் சம்பந்தன் எம்.பியிடம் கேட்டு எமக்கு புளித்து விட்டது.

இந்த தமிழ் மக்களை ஏமாற்றி வல்லாதிக்க சக்திகளுக்கு தேவையான ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு வாக்குகளை பெற்றுக்கொடுப்பதற்கு கடந்த 18 வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வந்திருக்கின்றது. இவ்வாறு தான் முஸ்லிம் தலைவர்களும் செயற்பட்டு வந்திருக்கின்றார்கள். எனவே எதிர்காலத்திலாவது இவ்வாறான அணுகுமுறைகளை கைவிட்டு தமிழ்-முஸ்லிம் மக்களிற்கான நிரந்தர தீர்வு ஒன்றினை முன்வைத்து ஒற்றையாட்சியை ஒழித்து சமஷ்டி ஆட்சியை கொண்டு வருவதற்காக ஒன்றுபட்ட நிலைப்பாட்டை எடுக்க முயற்சிப்பாராயின் அது தொடர்பில் எமது தலைமையும் பரிசீலிக்க தயாராக இருக்கும். இவ்வாறான நிலைப்பாடுகளை எடுக்காமல் வெறுமனே இந்த தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற ஏமாற்று நாடகங்களுக்கு நாங்கள் ஒருபோதும் துணை போவதில்லை. தமிழ் மக்கள் மாத்திரமல்ல வடக்கு-கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களும் இந்த தேர்தலை ஒற்றுமையாக பகிஸ்கரிக்க வேண்டும் என்பதே எமது கருத்தாகும்-என்றார். (அ)





# சங்கானையிலும் கொடிகாமத்திலும் பொதுவேட்பாளர் ஆதரவு கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி தமிழ் மக்கள் பொதுச்சபை தொடர் கலந்துரையாடல்களையும் கூட்டங்களையும் நடத்தி வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடிகாமம் வர்த்தக சங்கத்தினருடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. அத்துடன் நேற்று முன் தினம் காலை சங்காணை கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டியதன் அவசியம் பற்றியும் தமிழ் மக்கள் ஒன்று சேர தவறும் பட்சத்தில் தமிழ் மக்களின் வாக்குகளும் பலமும் சிதறும் ஆபத்துக்கள் பற்றியும் தமிழ் மக்கள் பொதுச்சபையின் சார்பாக கலந்துகொண்டோர் விளக்கமளித்தனர்.

அத்துடன் கலந்துகொண்டவர்களோடு கேள்வி பதில் உரையாடல்களும் இடம்பெற்றன.

தொடர்ந்துவரும் நாட்களில் தங்களின் பங்களிப்பும் இருக்கும் என கலந்துகொள்ளும் மக்கள் அமைப்புகளின் அங்கத்தவர்கள் நம்பிக்கை வெளியிட்டு வருகின்றனர். (அ)

# முதலாளிமார் சம்மேளனத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் விரைவில் வழக்கு?

கொழும்பு, ஜூன் 20

முதலாளிமார் சம்மேளனத்துக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆராய்ந்து வருகிறது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 1700 ரூபாவாக நிர்ணயித்து அரசாங்கம் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டது.

அதன் அடிப்படையில் அரச பெருந்தோட்ட யாக்கங்களும் மேலும் சில நிறுவனங்களும் நாளாந்த வேதனத்தை அதிகரித்துள்ளன.

எனினும் முதலாளிமார் சம்மேளனம் இந்த அதிகரிப்பை ஏற்க மறுத்துள்ளதுடன், அதற்கு எதிராக மேன்முறையீடு செய்யவும் எதிர்பார்த்துள்ளது.

இந்த நிலையில் 1700 ரூபாய் நாளாந்த வேதனம் வழங்க மறுக்கும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வழக்குத் தாக்கல் செய்ய எதிர்பார்த்துள்ளதாக அதன் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# உரும்பிராயில் பாம்பு தீண்டி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணத்தில் பாம்பு தீண்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த ஐயாத்துரை செல்வமகிந்தன் (வயது 46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மாடு கட்டச் சென்ற போது, புடையன் பாம்பு தீண்டியுள்ளது. அதனை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# இலங்கை நிதி உளவறிதல் பிரிவுடன் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு ஒப்பந்தம்!

கொழும்பு, ஜூன் 20

இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவுக்கும் கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணத் தூய்மையாக்கல், கையூட்டல் அல்லது ஊழல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பான விசாரணை மற்றும் வழக்குத் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்காக இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் ஆணையாளர் சேத்திய குணசேகரவும் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் சுபானி கீர்த்திரட்ணவும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர். (அ)

# உத்தேச வாடகை வரி அனைத்து வீடுகளுக்கும் அறவிடப்படுமென்பதே ஐ.எம்.எவ். நிபந்தனை!

## லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 20

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தில் முதலாவது சொத்துக்கு மாத்திரம் வருமான வரி மட்டுப்படுத்தப்படவில்லை என்பதுடன் உத்தேச வாடகை வரியானது அனைத்து வீடுகளுக்கும் அறவிடப்படவேண்டும் என நிபந்தனை விதித்துள்ளதாகவும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

வாடகை வருமான வரி அற வீட்டில் முதலாவது சொத்துக்கு வருமானம் ஈட்டுவோர் உத்தேச வாடகை வரியில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தில் முதலாவது சொத்துக்கு மாத்திரம் வருமான வரி மட்டுப்படுத்தப்படவில்லை.

உத்தேச வாடகை வரியானது அனைத்து வீடுகளுக்கும் அறவிடப்படவேண்டும் என்றே சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்துள்ளது.



முதலாவது சொத்துக்கு வருமானம் ஈட்டுவோர் உத்தேச வாடகை வரியில் இருந்து விடுவிக்கப்படுவதுடன் சாதாரண வருமானம் ஈட்டுபவர்களுக்கு அன்றி, அதிக வருமானம் ஈட்டுவோருக்கே இந்த வரி விதிக்கப்படும் என ஜனாதிபதி பாராளுமன்றில் தெரிவித்தார்.

எனினும், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் மாற்றம் மேற்கொள்ளமுடியாது என ஜனாதிபதி இதற்கு முன்னதாக தெரிவித்திருந்தார்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# ரணிலுக்கு ஆதரவாக எஸ்.பி. களமிறக்கம்!

**ராஜபக்ஷக்களை பின்வாங்குமாறு வலியுறுத்து**



கொழும்பு, ஜூன் 20

**ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்கும் முடிவை பொதுஜன பெரமுன கட்சி எடுக்க வேண்டும் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு- பொதுஜன பெரமுன கட்சி தமது ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை பெயரிட்டால் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலர் வருவார்கள், சிறு கட்சிகளும் இணையும். அவ்வாறு பெயரை அறிவிக்காவிட்டால் மாற்றம் எதுவும் நடக்காது.

எனவே, ராஜபக்சக்கள் ஒரு அடி பின்வாங்கி, நாடு பற்றி யோசித்து முடிவை எடுக்க வேண்டும். ரணிலை வேட்பாளராக அறிவிப்பது நல்லது. அதேபோல மொட்டு கட்சியின் ஆதரவை பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் முழு வீச்சுடன் செயற்பட வேண்டும்.

சிலவேளை ரணிலுக்கு பதிலாக மற்றுமொரு வேட்பாளரை மொட்டு கட்சி நிறுத்தினால் அது சாதகமற்ற முடிவாகவே அமையும். மொட்டு கட்சி தோற்கும், ரணிலும் தோற்பார். சஜித் வெற்றி பெறுவார். ஜே.வி.பி. இரண்டாம் இடத்துக்கு வரக்கூடும்-என்றார். (அ)



## வவுனியா பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் சத்தியாக்கிரக போராட்டம்

வவுனியா, ஜூன் 20

வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் இன்று முதல் சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அனைத்து பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா ஊழியர்கள் தமது சம்பள உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 48 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டதோடு அரச தரப்போடு பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டு வந்திருந்தனர்.

எனினும் அவர்களுடைய பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிக்காத நிலையில் 49 ஆவது நாளான நேற்றிலிருந்து அவர்கள் வவுனியா பல்கலைக்கழக வாயிலில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழக வாயிலில் கொட்டகை அமைத்து தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை காட்சிப்படுத்தியவாறு அவர்கள் சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## குடிதண்ணீர் பவுசர் பொலிஸ் நிலையத்தில் காரைநகர் மக்கள் தண்ணீருக்கு அலைச்சல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணத்தில் விபத்தில் சிக்கிய தண்ணீர் பவுசரை பொலிஸார் தடுத்து வைத்திருப்பதால், காரைநகர் பகுதி மக்கள் குடிதண்ணீருக்கு அல்லல்பட்டு வருகின்றனர்.

காரைநகர் பிரதேச சபைக்கு சொந்தமான தண்ணீர் பவுசர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது, கல்லுண்டாய் பகுதியில் முச்சக்கர வண்டியுடன் விபத்துக்குள்ளானது.

விபத்தில் முச்சக்கர வண்டி சாரதி படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார் விபத்துக்குள்ளான வாகனங்கள் இரண்டையும் பொலிஸ் நிலையம் எடுத்து சென்றதுடன், பவுசர் சாரதியையும் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட சாரதி பிணையில் விடுக்கப்பட்டுள்ள நிலையில், தண்ணீர் பவுசர் பொலிஸ் நிலையத்தில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

அதனால் காரைநகர் பகுதிக்கான நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால், அப்பகுதி மக்கள் குடிதண்ணீருக்கு அல்லல்பட்டு வருகின்றனர்.

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட தாய், மகள்!

கொழும்பு, ஜூன் 20

கண்டி பிரதேசத்தில் பேராதனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வனப்பகுதியொன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட தாய் மற்றும் மகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

48 வயதுடைய தாயாரும் 26 வயதுடைய மகளுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 1,250 லீற்றர் கோடா ,200 லீற்றர் கசிப்பு , சமையல் எரிவாயு மற்றும் சமையல் எரிவாயு அடுப்பு உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, சந்தேக நபர்களுடன் இணைந்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாக கூறப்படும் மேலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க பாடசாலைக்கு அதிபரை நியமிக்க கோரி பெற்றோர் போராட்டம்



முல்லைத்தீவு, ஜூன் 20

முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு பாடசாலை அதிபர் ஒருவரை நியமிக்குமாறு கோரி பாடசாலை வாயில் முன்பாக பெற்றோர்கள் நேற்று புதன்கிழமை காலை 7 மணியளவில் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு அரசினர் தமிழ்கலவன் வித்தியாலயம் கடந்த 8 மாதங்களாக அதிபர் இல்லாமலேயே இயங்கி வருகின்றது. இப்பாடசாலையில் 57 மாணவர்கள் கற்கின்றனர். இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும், மாணவர்களுக்கு கல்வி சரியாக கிடைக்கவில்லை எனவும், இது தொடர்பாக வலயக்கல்வி பணிமனையில் முறையிட்டிருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், நிலையாக அதிபரை நியமிக்குமாறும், அதனை எழுத்து வடிவில் ஆவணமாக தரும்வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் கூறி பாடசாலை வாயிலை மறித்து பெற்றோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த முல்லைத்தீவு பொலிஸார் பெற்றோருடன் கலந்துரையாடி வீதியில் நின்ற ஆசிரியர்களை பாடசாலைக்குள் அனுப்பினர். அதனையடுத்து பெற்றோருக்கும், பொலிஸாருக்கும் இடையில் குறித்த பிரச்னை தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதனையடுத்து குறித்த இடத்திற்கு வருகை தந்த வலயக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் , பொலிஸார், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதில் வலயக்கல்வி பணிப்பாளர், அதிபர் நியமனம் குறித்து எழுத்து மூலமான உறுதிமொழி தரமுடியாது. முள்ளிவாய்க்கால் கிழக்கு பாடசாலைக்கு அதிபர்கள் வர விருப்பம் காட்டவில்லை. அதிபர் ஒருவரை நியமிக்க முயற்சி எடுப்பதாக தெரிவித்தார்.

இந்த உறுதிமொழியை பெற்றோருக்கு தெரியப்படுத்துமாறு கேட்கப்பட்டது. அவ்வாறு கூறமுடியாது எனவும், பிரதிநிதிகளை வெளியே சென்று கூறுமாறும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை எமது பாடசாலைக்கான நிரந்தர அதிபர் கிடைக்குமென்று உறுதிமொழி வலயத்திலிருந்து வரவில்லை. ஆனால் முயற்சி செய்வதாக அவர்கள் கூறி இருக்கின்றார்கள். அதிபரை நியமிப்பது தொடர்பாக காலகெடுவினையும் கூறவில்லை. சரியான உறுதிமொழிகள் வழங்கப்படாததையடுத்து போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது என பெற்றோர்கள் கூறினர். (அ)

## இஸ்லாமியர்களின் தியாகத் திருநாளை ஒட்டிய சிறப்பு ஒன்றுகூடல் கலாசாலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 20

இஸ்லாமியர்களின் தியாகத் திருநாளை சிறப்பிக்கும் வகையில் அமைந்த சிறப்பு ஒன்று கூடல் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ரதிலட்சுமி மண்டபத்தில் நேற்று புதன் கிழமை காலை இடம்பெற்றது.

கலாசாலை இஸ்லாமிய மன்றத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வை.பர்சாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஈகத்திருநாள் பற்றிய விளக்க உரையை இரண்டாம் வருட விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி மு.அ.அஸ்மிலா பேகம் ஆற்றினார்.

பெருநாள் குறித்த கவிதையை இரண்டாம் வருட ஆங்கிலநெறியை சேர்ந்த ஆசிரிய மாணவி ச.பார்த்திமா றிஸ்றினா வழங்கினார். இரண்டாம் வருட விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி எம்.ஐ.எப்.சப்[illegible] இஸ்லாமிய கீதங்கள் இசைத்தார்.

இஸ்லாமிய மன்றக் காப்பாளர் திருமதி சர்மிளா பாஸ்கரன் நிகழ்வில் ஆசியுரை வழங்கினார். விரிவுரையாளர் வே. சேந்தன் இஸ்லாத்தின் தோற்றமும் வளர்ச்சியும் சமூக விஞ்ஞானப் பார்வை எனும் பொருளில் உரையாற்றினார்.கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் [illegible] நிறைவுரை ஆற்றினார். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுநரின் ஆணைப்படி கதிர்காமத்துக்கான காட்டுப் பாதை 30ஆம் திகதி திறக்கப்படும்!

## அம்பாறை மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு

காரைதீவு, ஜூன் 20

**கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஆணைப்படி கதிர்காமத்திற்கான காட்டுப் பாதை எதிர்வரும் 30 ஆம் திகதி திறக்கப்படும். என்று அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் தெரிவித்தார்.**

இவ் அறிவித்தலையடுத்து இன்று வியாழக்கிழமை லாகுகல பிரதேச செயலகத்தில் நடைபெறவிருந்த பாதயாத்திரை தொடர்பான கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆளுநர் அலுவலகத்தில் இருந்து நேற்று எமக்கு உத்தியோகபூர்வ கடிதம் கிடைக்கப் பெற்றது.

ஆளுநரின் செயலாளர் மதநாயக்க அனுப்பி வைத்த அக் கடிதத்தின் பிரகாரம் காட்டுப் பாதை 30 ஆம் திகதி திறக்கப்படும். அதில் ஆளுநர் கலந்து கொள்ளவிருக்கிறார். அதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

காட்டுப் பாதை திறப்பதில் முன்னொரு போதுமில்லாத வகையில் சர்ச்சை நிலவியது. இருந்தபோதிலும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அந்த சர்ச்சையை நீக்கி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். எனவே அடியார்கள் அந்த தேதியை மையமாக வைத்து செயற்படுமாறு வேண்டுகிறேன் என்றார்.

உகந்த மலை முருகன் ஆலயத்தில் அண்மையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு 30 ஆம் திகதி ஆகும்.

அதே தீர்மானம் ஆளுநரால் மீண்டும் உறுதிப்படுத்தபட்டுள்ளது-என்றார்.

(அ)



# மது அரக்கனே வெளியேறு!

திருமலை, ஜூன் 20

மூதூர் இருதயபுர பிரதேசத்தில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ள மதுபானச்சாலையின் அனுமதியை உடனடியாக இரத்து செய்யுமாறு வலியுறுத்தி நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் மூதூர் மணிக்கூட்டு கோபுரச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்டு மூதூர் பிரதேச செயலகம் வரை சர்வமதத் தலைவர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள், பெண்கள், மற்றும் இருதயபுர பொதுமக்கள் பங்குபற்றுதலுடன் பேரணியாக முன்னெடுக்கப்பட்டது.

இறுதியில் மூதூர் பிரதேச செயலாளருக்கு பொதுமக்கள் சார்பாக மதுபானச்சாலையை மூடும் படி மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)



# உகந்தையில் சிவாச்சாரிய அபிஷேக குரு பட்டாபிஷேகம்

காரைதீவு, ஜூன் 20

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலயத்தில் வரலாற்றில் முதல்முறையாக சிவாச்சார்ய அபிஷேக குரு பட்டாபிஷேகம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதல் குருபட்டாபிஷேகம் ஆலயத்தின் உதவிக்குரு கு.சீ. கோவர்த்தன சர்மாவிற்கு நடைபெற்றது.

முத்து ஆலயத்தின் உதவிக் குரு கோபி நாத சர்மா ஐயாவுக்கு குரு பட்டாபிஷேகம் நடைபெற்றது.

உகந்த மலை முருகன் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ க. கு.சீதாராம் குருக்கள் பட்டாபிஷேத்தை நடத்தி வைத்தார்.

இதுவரை இவர்கள் இருவருக்கும் வழங்கப்பட்டு வந்த சர்மா என்ற நாமம் இனி குருக்கள் என அழைக்கப்படும்.

(அ)

# நடைபாதை வியாபாரத்தை உடனடியாகத் தடை செய்க!

## சந்தை வியாபாரிகள் போராட்டம்

திருமலை, ஜூன் 20

திருகோணமலை நகரில் நடைபாதை வியாபாரத்தை தடைசெய்ய கோரி திருகோணமலை பொதுச் சந்தை வியாபாரிகள் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனுமதியற்ற நடைபாதை வியாபாரத்தை உடனடியாக நிறுத்த அரச உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோசங்களை எழுப்பினர். தமது தொழில் பாதிக்கப் படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.



ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் திருகோணமலை நகராட்சி மன்ற செயலாளருக்கு மகஜர் ஒன்றும் கையளித்தனர்.

(அ)

# பாசிக்குடா கடலில் நீராடிய இளைஞன் ஒருவன் நீரில் மூழ்கிய நிலையில் மீட்பு!

மட்டக்களப்பு, ஜூன் 20

பாசிக்குடா கடலில் நீராடிய இளைஞன் ஒருவன் நீரில் மூழ்கிய நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த நண்பர்கள் பாசிக்குடா கடலில் நீராடிக் கொண்டிருந்த போது 21 வயதுடைய இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார்.

நீரில் மூழ்கிய இளைஞனை பாசிக்குடா கடற்படையினர், பொலிஸார் ஆபத்தான நிலையில் மீட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

நீரில் மூழ்கிய இளைஞன் கூடுதலாக நீர் அருந்தியதில் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சிறுவர் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்புப் பணியகங்கள் கிழக்கில் திறப்பு

அம்பாறை, ஜூன் 20

சிறுவர் மற்றும் பெண்கள் மீதான வன்கொடுமை உள்ளிட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம், நிந்தவூர், மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் பொலிஸ் நிலை யங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் வன் கொடுமை தடுப்புப் பணியகங்கள் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளன.



நேற்று அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது, நிந்தவூர், இறக்காமம் பொலிஸ் நிலையங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்புப் பணியகங்களை கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோகண பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், உட்பட சர்வமத தலைவர்கள், மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஒரு இலட்சம் மரம் நடும் திட்டத்தின் கீழ் காத்தான்குடியில் மரம் நடுகை ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜூன் 20

காத்தான்குடியில் ஒரு இலட்சம் மரம் நடும் திட்டத்தின் கீழ் நேற்று செவ்வாய்க்கிழமை காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்கு முன்பாக மரம் நடுகை நிகழ்வு இடம்பெற்றது

கோ கிறீன் பசுமை வேலைத் திட்டத்தின் கீழ் இந்த மரம் நடுகை நிகழ்வு இடம் பெற்றது.

இந்த திட்டத்தின் கீழ் காத்தான்குடியில் [illegible] மரம் நடுகை இடம் பெற்று வருகிறது.



ஆரம்ப நிகழ்வில் காத்தான்குடி மத்திய கல்லூரி அதிபர் நிஹால் அஹ மட், கோ கிறீன் திட்டத்தின் ஏற்பாட்டாளர்களான மாஹிர், டாக்டர் நிஹாஜ், லாபீர் ஆசிரியர், மௌலவி முஸ்தபா செரீப் உட்பட காத்தான் குடி மத்திய கல்லூரி ஆசிரியர் கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



### கடும் வெப்ப அலையால்

# ஹஜ் யாத்திரை சென்ற 550 பேர் உயிரிழந்தனர்!



ரியாத், ஜூன் 20

**கடுமையான வெப்பம் காரணமாக இந்த ஆண்டு ஹஜ் புனித யாத்திரை மேற்கொண்ட சுமார் 550 பேர் உயிரிழந்தனர் என சவூதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்கள் எகிப்து, ஜோர்தான், இந்தோனேசியா, ஈரான், செனகல்நாடுகளை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.**

இஸ்லாமிய மக்கள் தங்களின் வாழ்வியல் கடமைகளில் முக்கியமானதாக கருதப்படும் புனித ஹஜ் யாத்திரைக்காக ஆண்டுதோறும் சவூதி அரேபியாவின் மெக்கா, மதினாவுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், இந்த ஆண்டு சவூதியில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக இந்த யாத்திரையின் போது சுமார் 550 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 323 பேர் எகிப்து மற்றும் 60 ஜோர்தான் நாட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களின் உடல்கள் மெக்காவுக்கு அருகில் உள்ள மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

காலநிலை மாற்றத்தால் ஆண்டுக்கு 0.4 பாகை செல்சியஸ் என்ற அளவில் மெக்காவில் சடங்குகள் மேற்கொள்ளப்படும் முக்கிய இடத்தில் வெப்பம் அதிகரித்து வருவதாக கடந்த மாதம் வெளியான ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. கடந்த திங்கட்கிழமை அன்று மெக்காவில் உள்ள அல் ஹராம் மசூதியில் சுமார் 51 பாகை செல்சியஸ் வெப்பம் நிலவியதாக சவுதி வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த சூழலில் புனித யாத்திரையின் போது காணாமல் போன எகிப்து மக்களை சவூதி அதிகாரிகளின் உதவியுடன் தேடி வருகின்றனர் எகிப்து நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார். மேலும், யாத்திரையின் போது உயிரிழப்பு ஏற்பட்டதையும் அமைச்சகம் உறுதி செய்தது. ஆனால், உயிரிழந்த எகிப்து மக்களின் எண்ணிக்கையை வெளியிடவில்லை.

யாத்திரையின் போது வெப்பத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 2 ஆயிரம் பேருக்கு சிகிச்சை அளித்து வருவதாக சவூதி அரசு தெரிவித்தது. இருந்தாலும் கடந்த ஞாயிற்றுக்கிழமைக்கு பிறகு பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை குறித்த விவரத்தை புதுப்பிக்காமல் உள்ளது.

நடப்பு ஆண்டில் சுமார் 18 இலட்சம் பேர் ஹஜ் யாத்திரை மேற்கொண்டுள்ளனர். இவர்களில் 16 இலட்சம் பேர் வெளிநாட்டை சேர்ந்தவர்கள் என சவுதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## காற்று மாசுபாட்டால் மட்டும் 81 இலட்சம் பேர் உயிரிழப்பு

புதுடில்லி, ஜூன் 20

காற்று மாசுபாட்டால் 2021ஆம் ஆண்டில் 81 இலட்சம் மக்கள் உயிரிழந்தனர். இதில் சீனா, இந்தியாவில் அதிக அளவில் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

சுகாதார விளைவுகள் நிறுவனம் மற்றும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் அமைப்பு சேர்ந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெற்கு ஆசியாவில் இறப்புக்கான முக்கிய காரணமாக காற்று மாசுபாடு உள்ளது. அத்துடன், இரத்தம் அழுத்தம், உணவு சரியாக சாப்பிடாமல் இருப்பது மற்றும் புகையிலை பாவனை என்பனவும் உயிரிழப்புகளுக்குக் காரணமாக உள்ளன.

இந்தியாவில், 5 வயதுக்கு கீழுள்ள சிறுவர்கள் மட்டும் ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 400 பேர் உயிரிழந்தனர். இந்தியாவுக்கு அடுத்து நைஜீரியாவில் ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 100, பாகிஸ்தானில் 60 ஆயிரத்து 100, எத்தியோப்பியாவில் 31 ஆயிரத்து 100 சிறுவர்கள் காற்று மாசால் உயிரிழந்தனர்.

ஒட்டுமொத்தமாக சீனாவில் 23 இலட்சம் பேரும், இந்தியாவில் 21 இலட்சம் பேரும் உயிரிழந்தனர். இந்த இரு நாடுகளும் சேர்ந்து உலகில் காற்றால் மரணமடைந்தவர்களின் சதவீதம் 54ஆக உள்ளது.

மூன்றாவது இடத்தில் பாகிஸ்தான் உள்ளது. அங்கு 2 இலட்சத்து 56 ஆயிரம் பேர், பங்களாதேஷில் 2 இலட்சத்து 36 ஆயிரத்து 300 பேர், மியன்மாரில் ஒரு இலட்சத்து 16 ஆயிரம் பேரும் உள்ளனர். (ஐ)

## ரஷ்ய எண்ணெய் களஞ்சியத்தை தாக்கின உக்ரைன் ட்ரோன்கள்!


மொஸ்கோ, ஜூன் 20

ரஷ்யாவின் எண்ணெய் களஞ்சியத்தை உக்ரைன் ட்ரோன்கள் நேற்று தாக்கின. இதில், அந்த எண்ணெய் களஞ்சியம் தீப்பிடித்து எரிந்து வருகின்றது.

ரஷ்யாவின் ரோஸ்டோவ் மாகாணத்தில் உள்ள அசோவ் எண்ணெய் களஞ்சியமே இவ்வாறு தாக்கப்பட்டது.

முதல் கட்ட தகவலின்படி இந்தத் தாக்குதலில் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை என்று தெரிய வந்துள்ளது.

4000 சதுர மீற்றர்கள் கொள்ளளவு கொண்ட கிடங்கில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணியில் 200 தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## பேய்களுக்கு திருமணம்!

கோலாலம்பூர், ஜூன் 20

மலேசியாவை சேர்ந்த ஜிங்ஷன் என்ற இளைஞரும் அதே பகுதியை சேர்ந்த லீ என்ற பெண்ணும் 3 வருடங்கள் காதலித்தனர். இவர்கள் இருவரும் கடந்த 2ஆம் திகதி திருமண பந்தத்தில் இணையவிருந்தனர்.

ஆனால், கடந்த மே 24ஆம் திகதி இவர்கள் இருவரும் பயணித்த கார் விபத்துக்கு உள்ளானதில் உயிரிழந்தனர். இவர்களின் மரணம் அவர்களின் குடும்பங்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தின.

இந்த நிலையில், இருவரின் குடும்பத்தவர்களும் இணைந்து லீ- ஜிங்ஷன் இருவரையும் மறுமையில் கணவன் - மனைவியாக ஒன்றிணைக்கும் வகையில் பேய் திருமணம் என்ற சடங்கை நடத்தியுள்ளனர்.

பேய் திருமணம் என்பது திருமணம் ஆகாத ஆவிகளை இணைக்கும் ஒரு சடங்கு ஆகும். இதன்படி ஒரு மண்டபத்தில் இறந்த தம்பதியின் புகைப்படத்தை வைத்திருந்தனர். அதில் ஜிங்ஷனின் குடும்பத்தினர் லீயை தங்கள் மருமகளாக குறிப்பிட்டு அவருக்கு திருமண சடங்கு நடத்தினர்.

இது தொடர்பான காணொலி, ஒளிப்படங்கள் சமூகவலைதளத்தில் பிரபலமாகி வருகின்றன. (ஐ)

### சீன எச்சரிக்கையை மீறி

## தலாய்லாமாவை சந்தித்து அமெரிக்க எம். பிக்கள் பேச்சு

சீனாவின் எச்சரிக்கையையும் மீறி இந்தியா சென்றுள்ள அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் சீனாவின் எச்சரிக்கையையும் மீறி தர்மசாலாவில் உள்ள தலாய் லாமாவை சந்தித்து பேச்சு நடத்தினர்.

சீனாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட திபெத்திய ஆன்மிகத் தலைவரான தலாய் லாமா இமாச்சல பிரதேசத்தின் தர்ம்சாலாவில் தங்கி இருக்கிறார். 1959இல் திபெத்தில் இருந்து தப்பி வந்த அவருக்கு இந்தியா அடைக்கலம் அளித்துள்ளது.

தலாய் லாமாவை சந்திக்க



செல்வாக்கு மிக்க அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் 7 பேர் நேற்றுமுன்தினம் தர்மசாலாவில் பங்கேற்று பேசினர்.

இதேநேரம், தலாய் லாமாவை ஆபத்தான பிரிவினைவாதி என்று அழைக்கும் சீனா அமெரிக்க எம். பிக்களின் இந்த பயணம் குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது. (ஐ)

## வடகொரியா சென்ற புடினுக்கு வரவேற்பு

பியோங்யாங், ஜூன் 20

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்று வடகொரியாவுக்கு சென்றார். கடந்த 2023ஆம் ஆண்டு செப்ரெம்பரில் வட கொரியாவுக்கு வரும்படி புடினை வட கொரிய தலைவர் கிம் ஜோங்-உன் அழைத்திருந்த நிலையில் புடினின் இந்த சுற்றுப் பயணம் அமைந்துள்ளது.

நேற்று வட கொரியா தலைநகர் பியோங்யாங் சென்றடைந்த புடினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. விமான



நிலையத்தில் சிவப்பு கம்பள வரவேற்பு அளித்தார் வட கொரிய தலைவர் கிம். அதன்பின்னர் இரண்டு தலைவர்களும் ஒரே காரில் அரசு விருந்தினர் மாளிகைக்கு சென்றனர். அவர்கள் சென்ற கார், ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டது. இந்த காரை, கடந்த ஆண்டு கிம்முக்கு புடின் வழங்கினார்.

உக்ரைன் போர் முக்கியத்துவம் நடந்துவரும் நிலையில் ரஷ்யாவுக்கு ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. அந்த ஆயுதங்களை வடகொரியா வழங்கி வருவதாக குற்றச்சாட்டுகள் உள்ள நிலையில் ரஷ்ய ஜனாதிபதியின் இந்தப் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கி விருப்பத்திற்கு ஏற்ப எவ்வாறு சம்பளத்தை அதிகரிக்கும்?

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி

கொழும்பு, ஜுன் 20

**பல்கலைக்கழக கல்விசாரா உத்தியோகத்தர்கள் சம்பள பிரச்சினை காரணமாக தற்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் காரணமாக இலவசக் கல்வியின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்கள் சகலதினதும் பணிகள் ஸ்தம்பித்துள்ளன. இவ்வாறானதொரு சூழ்நிலையில் மத்திய வங்கி தன்னிச்சையாக சம்பளத்தை அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

மேலும், கல்விச் சேவையில் 241,000 ஆசிரியர்கள், 12,000-14,000 இடையிலான அதிபர்கள், கல்விசாரா, கல்வி நிர்வாகம் போன்ற துறைகள் சம்பளப் பிரச்னையால் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன. 40,000 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் இவ்வேளையில், 20,000 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்தப் பற்றாக்குறையை நிவர்த்திக்க பெரும் சேவையை செய்துள்ளனர். இந்த தரப்பினர்களின் பிரச்னைகள் இவ்வாறு இருக்கும்போது, மத்திய வங்கி எவ்வாறு இஷ்டத்திற்கு சம்பளத்தை அதிகரித்தது என்பதில் பிரச்னை இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.



அரசியல் ரீதியான தலையீடுகளைத் தவிர்ப்பதற்காக மத்திய வங்கியை சுயாதீனமாக ஆக்கினாலும், அதனைப் பயன்படுத்திக் கொண்டு சம்பளத்தை அதிகரித்துக் கொண்டுள்ளனர். இவையனைத்தும் முடியும் வரை அரசாங்கம் மௌனம் காத்துக் கொண்டு, பொறுப்பற்ற விதத்தில் இருந்து வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார். (அ)

# மேலும் 5 சுற்றுலா வலயங்களை நாட்டில் ஆரம்பிப்பதற்கு திட்டம்!

கொழும்பு, ஜுன் 20

நாட்டில் மேலும் 5 சுற்றுலா வலயங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுற்றுலாத்துறையை கட்டியெழுப்புவதற்கு பல சவால்களை எதிர்கொள்ள நேரிட்டது. மின்சாரம் எரிபொருள் எரிவாயு இல்லாத ஒரு நாட்டில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது வேடிக்கையான விடயமாகும்.

அவ்வாறான ஒரு சூழ்நிலையில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க நெருக்கடிக்கு தீர்வு காணும் முயற்சிகளை மேற்கொண்டார். தற்போது நாட்டின் சுற்றுலாத்துறை



வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியானது பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய ஒத்துழைப்பு வழங்கும் வகையில் உள்ளது. நாட்டில் மேலும் 5 சுற்றுலா வலயங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதனூடாக சுற்றுலாத்துறை வருமானத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறப்படுத்துவதற்கும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது-என்றார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடின் அவருக்கு ஆதரவு

## கூறுகிறார் லொஹான் ரத்வத்த

கொழும்பு, ஜுன் 20

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து உறுதியான பதிலுக்காக காத்திருப்பதாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அம்பிலிபிட்டிய மகாவலி விளையாட்டரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் அவருக்கு நேரடியாக ஆதரவளித்து அவரை வெற்றி பெறச் செய்வேன் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டுக்கு சரியான வேலைத்திட்டத்தை முன்வைத்த ரணில் விக்கிரமசிங்க நாட்டை சரியாக ஆட்சி செய்கின்றார்.

இன்று நாட்டின் ஜனாதிபதி வேட்பாளர்கள் சமூக ஊடகங்களிலும் ஏராளமான வேட்பாளர்கள் உள்ளனர். நீங்கள் யாராக இருந்தாலும் ஜனாதிபதியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் இன்னும் ஐந்து வருடங்களுக்கு தொடர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# முத்திரை விலையை அதிகரிக்க அனுமதி?

கொழும்பு, ஜுன் 20

முத்திரை ஒன்றின் குறைந்த பட்ச விலையை 100 ரூபாவாக அதிகரிப்பதற்கான அங்கீகாரம் மிக விரைவில் கிடைக்கப்பெறும் என வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்தார்.

தற்போது கடிதம் அனுப்புவதற்கு முத்திரை ஒன்றின் குறைந்தபட்ச விலை ஐம்பது ரூபாவாக உள்ளதாகவும் தபால் திணைக்களத்தின் நட்டத்தை குறைக்கும் வகையில் முத்திரையின் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அஞ்சல் துறைக்கு கடந்த 2023ஆம் ஆண்டில் மட்டும் 7,000 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஜனாதிபதி விமர்சிப்பது தவறு

## அத்துரலிய ரத்ன தேரர்

கொழும்பு, ஜுன் 20

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் மகிழ்ச்சியடையவில்லை. ஆகவே இந்தத் தீர்ப்பு குறித்து பாராளுமன்றத்தின் ஊடாக விசேட கவனம் செலுத்த வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை அவரது தனிப்பட்ட நிலைப்பாடா அல்லது அமைச்சரவையின் நிலைப்பாடா? நீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்றுத்துறை விமர்சிப்பது தவறானதொரு எடுத்துக்காட்டாகும் என பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் எதிரணியின் உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சட்டத்துறை, நீதித்துறை, நிறைவேற்றுத்துறை உள்ளிட்ட மூன்று துறைகளின் அதிகாரங்களும் வேறுபடுத்தப்பட்டுள்ளன. ஒரு துறையின் அதிகாரத்தில் பிறிதொரு துறை தலையிடகூடாது என்பது அரசமைப்பின் ஏற்பாடுகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன், சட்டமூலம் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கும் வியாக்கியானத்தை பாராளுமன்ற விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்று பாராளுமன்ற நிலையியல் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலின சமத்துவ சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள வியாக்கியானம் குறித்து மகிழ்ச்சியடைய போவதில்லை. பாராளுமன்றத்தின் ஊடாக விசேட கவனம் செலுத்த வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இது அவருடைய தனிப்பட்ட நிலைப்பாடா?அல்லது அமைச்சரவையின் நிலைப்பாடா? உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறைவேற்றுத்துறை விமர்சிப்பது தவறானதொரு எடுத்துக்காட்டாகும்.

இலங்கை பௌத்த நாடு அரசமைப்பில் ஆண் -பெண் என்ற அடிப்படையில் எவ்வித வேறுபாடுகளும் காண்பிக்கப்படவில்லை. சட்டத்தின் ஊடாக ஆண், பெண் சமமாகவே மதிக்கப்படுகிறார்கள். அதேபோல் பௌத்த மத கோட்பாடுகளிலும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஆண் மற்றும் பெண் பாலினத்துக்கு அப்பாற்பட்டு மூன்றாம் பாலின தரப்பினரது செயல்பாடு உலகளாவிய ரீதியில் எவ்வாறு காணப்படுகிறது என்பதை உலக நடப்பு அறிந்தவர்கள் நன்கு அறிவார்கள். மேற்குலக கலாசாரத்தை பின்பற்றால் இலங்கைக்கே உரித்தான சுதேச கலாசாரம் இல்லாதொழியும் -என்றார். (ஐ)

# ஆயுள்வேத பட்டதாரிகளின் பயிற்சி மீண்டும் ஆரம்பம்!

## இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி

கொழும்பு, ஜுன் 20

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக தடைப்பட்டிருந்த ஆயுர்வேத பட்டதாரிகளின் பயிற்சி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

இதன்படி, மாதாந்தம் 67,500 ரூபாய் கொடுப்பனவுடன் ஆயுர்வேத பட்டதாரிகளுக்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக அரசாங்கம் 320 மில்லியன் ரூபாயை செலவிடவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்-

சுதேச வைத்திய அமைச்சு என்ற வகையில் நாம் இதுவரை பெரும் வெற்றியைப் பெற்றுள்ளோம். கடந்த காலங்களில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகள் காரணமாக பல்கலைக்கழகங்களில் இருந்து சித்தியடைந்த ஆயுர்வேத பட்டதாரிகளின் தொழிற்பயிற்சி தாமதமானது.

அதன்படி, ஜுன் 3 ஆம் திகதி முதல் ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி பட்டதாரிகள் 207 பேருக்கு 67,500 ரூபாய் மாதாந்தக் கொடுப்பனவுடன் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் 153 பட்டதாரிகளுக்கான பயிற்சி ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதிக்குள் ஆரம்பிக்கப்படும். அதன்படி 418 பட்டதாரிகளுக்கு ஆயுர்வேத திணைக்களம் பயிற்சி அளித்து வருகிறது. இதற்காக அரசாங்கம் 320 மில்லியன் ரூபாயை செலவிடுகிறது.

சுதேச வைத்திய அமைச்சும், ஆயுர்வேத திணைக்களமும் இணைந்து தற்போது பாரம்பரிய வைத்தியர் பதிவுகளை எமது நாட்டில் விரிவுபடுத்தி வருகின்றன. அதன்படி, எதிர்வரும் ஜுன் 30 ஆம் திகதி வரை பதிவுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் உள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

சுட்டிக்காட்டினார்.

மனித உரிமைகள் பேரவையின் 56ஆவது அமர்வில் பூகோள ரீதியிலான நிலைமை அறிக்கையை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அதனுடன் தொடர்புடைய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் ஏழ்மையான மற்றும் வறுமை கோட்டிலுள்ள மக்களை அதிகம் பாதித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் 2021 மற்றும் 2023 இற்கு இடையில் வறுமை விகிதம் 13.1 சதவீதத்தில் இருந்து 25.9 சதவீதம் வரை இரட்டிப்பாகியுள்ளது. மேலும் இவ்வாறான நிலை அடுத்த சில ஆண்டுகளுக்கு இதே மட்டத்தில் தொடரும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (அ-ஐ)

## வவுனியாவில்...

விரிவுரையாளர் கலாநிதி நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

வீடுகளில் யன்னல்கள், கதவுகள் சில நொடிகள் பலத்த சத்தத்துடன் அதிர்ந்தன என்று மக்கள் தெரிவித்தனர். இந்த நிலநடுக்கம் அநுராதபுரம் மாவட்டத்திலும் சிறியளவில் உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## எதிர்காலத்தில்...

பதிவிட்டுள்ளார். அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

செவ்வாய்க்கிழமை இரவு 11.02 மணியளவில் நிகழ்ந்த புவி நடுக்கத் தின் அளவு 2. 3 ரிக்டர் என் தேசிய புவிச் சரிதவியல் மற்றும் கனிமவள பிரிவு அறிவித்துள்ளது.

இந்த புவி நடுக்கத்தின் குவிமையம் தாண்டிக்குளத்துக்கும் கூமாங்குளத்திற்கும் இடைப்பட்ட மரிக்காரம் பளையாகும். இந்த குவி மையம் புவி மேற்பரப்பிலிருந்து 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிகழ்ந்துள்ளது.

பொதுவாக எதிர்வு கூற முடியாத இயற்கை அனர்த்தங்களில் புவி நடுக்கம் முதன்மையானது. ஆனால், உலகின் பல பிரதேசங்களில் நிகழ்ந்த பெரும் புவி நடுக்க நிகழ்வுகள் இரண்டாகவே நிகழ்ந்துள்ளன. முதலாவது மிக மெதுவானதாக வெறும் நடுக்கத்துடன் கூடியதாகவே அமைந்துள்ளது. இதனை உணர்ந்து கட்டுமானங்களை விட்டு வெளியே வந்து வெளிப்பிரதேசங்களில் நின்றால் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய இரண்டாவது புவி நடுக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாக்கலாம்.

அண்மைக்காலத்தில் இலங்கையின் கடற்பிராந்தியங்களிலும் நிலப்பகுதிகளிலும் சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் அதிகளவில் ஏற்பட்டு வருகின்றன. இவை எதிர்காலத்தில் மிகப் பெரிய அளவிலும் நில நடுக்கங்கள் இடம்பெறலாம் என்பதற்கான சமிக்ஞைகளாகவே கருதலாம்.

அனர்த்தங்கள் தொடர்பான விழிப்புணர்வை சகல பிரஜைகளுக்கும் வழங்க வேண்டும். குறிப்பாக வெள்ளப் பெருக்கு, வறட்சி, புயல், சூறாவளி, நிலச்சரிவு, புவிநடுக்கம் தொடர்பான இயற்கை அனர்த்தங்கள் பற்றியும் வீதி விபத்துகள் மற்றும் தீ விபத்துகள் பற்றியும் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் இவற்றால் ஏற்படும் உயிர் மற்றும் உடைமை இழப்புக்களை தவிர்க்க முடியும் - என்றுள்ளது.

இதேவேளை, இந்த புவிநடுக்கத்துக்கும் வவுனியாவில் நடக்கும் கல் அகழ்வு, குழாய் கிணறு தோண்டுதல் போன்ற செயல்பாடுகளுக்கும் தொடர்புபடுத்தி பலரும் வெளியிடும் தகவல்களை அவர் மறுத்துள்ளார். அத்துடன், இவ்வாறான செயல்பாடுகள் வேறு பல பிரச்னைகளை தோற்றுவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மோடியின்...

இன்று வியாழக்கிழமை இலங்கை வருகிறார்.

இந்தியாவில் கூட்டணி அரசாங்கம் மீண்டும் அமைக்கப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக இலங்கை வரும் அவர் பல்வேறு தரப்பினரை சந்திக்கவுள்ளார். இதன்போது, நரேந்திர மோடி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் இலங்கை வருகிறார். இந்தப் பயணம் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார்.

மேலும், இந்தியாவின் முதலீட்டில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத் திட்டங்களின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்படும் - என்றும் அலி சப்ரி தெரிவித்தார். (அ)

## நயினை...

கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதில், இன்றைய தினம் தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

அதிகாலை 3.30 மணிக்கு ஆயத்த மணி ஒலித்து 4 மணிக்கு காலை பூசையும் தொடர்ந்து அபிஷேகம் ஆரம்பமாகும். பின்னர், விசேட பூசை, ஸ்தம்ப பூசை நடைபெற்று காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசை ஆரம்பமாகும்.

இதைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருவார். முற்பகல் 10.30 மணிக்கு தேர் இருப்பிடத்துக்கு வரும். பிற்பகல் 4 மணிக்கு பச்சை சாத்திரத அவரோகணம் நடைபெறும்.

நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா காலை 8 மணிக்கும் நடைபெறும்.

தேர், தீர்த்தத் திருவிழாக்களுக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரள்வார்கள் என்பதால் முன்னாயத்த நடவடிக்கைகள், சிறப்பு போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முல்லைத்தீவு...

யாழ்ப்பாணம் படை தலைமையகங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. கிளிநொச்சி படை தலைமையகத்தின் ஒரு பகுதி யாழ்ப்பாண படை தலைமையகத்தின் கீழும் மற்றோர் பகுதியும் முல்லைத்தீவு படை தலைமையகமும் வன்னி படை தலைமையகத்தின் கீழும் இணைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், வடக்கு மாகாணத்தில் சுமாராக 73 ஆயிரத்து 16 ஏக்கர் நிலமும் கிழக்கு மாகாணத்தில் 12 ஆயிரத்து 236 ஏக்கர் நிலமும் இராணுவத்தின் வசமிருந்தன. இவற்றில் வடக்கில் 63 ஆயிரத்து 187 ஏக்கர் நிலமும் விடுவிக்கப்பட்டுள்ளன. மேலும், 9 ஆயிரத்து 828 ஏக்கர் நிலம் விடுவிக்கப்படவுள்ளது என்று மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார். இதேபோன்று, கிழக்கு மாகாணத்தில் 8 ஆயிரத்து 772 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டுள்ளது. 3 ஆயிரத்து 464 ஏக்கர் நிலம் விடுவிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேசமயம், போர் காலத்தில் இராணுவ தேவைக்காக எடுக்கப்பட்ட நிலத்தில் 27 ஆயிரத்து 496 ஏக்கர் நிலம் இன்னமும் படைகள் வசம் இருக்கின்றன என்று தேசிய பாதுகாப்பு ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் கேணல் நளின் ஹேரத் தெரிவித்துள்ளார். இவை படிப்படியாக மக்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணத்தில் சிறிய முகாம்கள் பல அகற்றப்பட்டுள்ளன. அந்த நிலங்கள் மீளவும் மக்களிடம் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் ஓர் இராணுவ அதிகாரி கூறியுள்ளார். சிறிய முகாம்கள் அகற்றப்பட்டுள்ள போதிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் எவையும் குறைக்கப்படவில்லை. எந்தத் தாக்குதலையும் எதிர்கொள்ள படைகள் தயார் நிலையில் உள்ளன என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார். (ஐ)

# பொறுப்புக்கூறல், உண்மை, நீதியை ஆதரிக்கிறது பிரிட்டன்

## வெளிவிவகார அமைச்சர் கமரூன்

லண்டன், ஜூன் 20

அனைவருக்கும் நீதி - உண்மை - பொறுப்புக்கூறலை பிரிட்டன் ஆதரிக்கின்றது என்று தெரிவித்துள்ள பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் கமரூன், பிரித்தானிய தமிழர்களுக்காக கென்சவேர்ட்டிவ் கட்சியின் அர்ப்பணிப்பு மிகவும் உறுதியானது - தளர்ச்சியற்றது என்றும் கூறியுள்ளார்.

பிரிட்டனுக்கு தமிழ் சமூகத்தின் விலைமதிப்பற்ற பங்களிப்பை பாராட்டியுள்ள அவர், அனைவருக்கும் உண்மை - நீதி மற்றும் பொறுப்புக் கூறலை ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தின் பொது தேர்தலுக்கு முன்னதாக வெளியிட்ட காணொலியில் இதனை தெரிவித்துள்ள டேவிட் கமரூன் பிரிட்டனின் தமிழ் சமூகம் என்பது பெரும் வெற்றிக்கதை என்றும் குறிப்பிட்டார்.

மேலும், எங்கள் நாட்டின் வாழ்க்கைக்கு நீங்கள் (தமிழர்கள்) விலை மதிப்பற்ற பங்களிப்பை வழங்குகின்றீர்கள். வர்த்தகம் முதல் கற்பித்த மருத்துவம், உங்கள் உயிர்துடிப்புள்ள கலாசாரம் போன்றவற்றின் மூலம் நீங்கள் விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்குகிறீர்கள். எங்கள் தேசிய வாழ்வின் பல பகுதிகளிலும் தமிழர்கள் முக்கிய பங்கை வகிக்கிறீர்கள்.

எமது தமிழ் சமூகத்தின் வெற்றிகள் பிரிட்டனில் எதனையும் சாதிக்க முடியும் என்பதற்கான ஒரு முன்மாதிரி. நாங்கள் உங்கள் அபிலாசைகளுக்கும் எதிர்காலத்துக்கான நம்பிக்கைகளுக்கும் எப்போதும் ஆதரவளிப்போம்.

பல பிரித்தானிய தமிழர்கள் இலங்கையின் அண்மைக்கால வலிகளால் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர் என்பது எனக்கு தெரியும். இந்த வருடம் இலங்கையில் மோதல்கள் முடிவடைந்து 15 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன எனது நினைவுகள் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடுபவர்கள் குறித்ததாக உள்ளன.

1948ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையின் வடபகுதிக்கு பயணித்த (2013) முதல் பிரதமர் அல்லது தலைவர் நான். யுத்தத்தின் மோசமான விளைவுகள் குறித்து நான் நேரடியாக கேட்டறிந்து கொண்டேன். அன்று நான் வழங்கிய அர்ப்பணிப்பு இன்றும் உள்ளது - நீடிக்கின்றது. அனைவருக்கும் நீதி - உண்மை - பொறுப்புக்கூறலை பிரிட்டன் ஆதரிக்கின்றது. - என்றும் அவர் கூறினார். (ஐ)

## நீர்வேலியில்...

நடந்த கரப்பந்தாட்டப் போட்டியை பார்த்து விட்டு மோட் டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது, வீதியின் கரையில் நிறுத்தப்பட்டிருந்த டிராக்டருடன் மோதுண்டு விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஊடகவியலாளரின்...

வியாழக்கிழமை நள்ளிரவுவேளை இரு மோட்டார் சைக்கிளில் வந்த ஐவர் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்தத் தாக்குதலில் வீட்டிலிருந்த மோட்டார் சைக்கிள், ஓட்டோ மற்றும் வீட்டிலிருந்த பொருட்களுக்கு தீ வைக்கப்பட்டன. இந்த சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில், இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் மூவரை பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்து விசாரித்து வருகின்றனர்.

கைதானவர்கள் அச்சுவேலி, மாவிட்டபுரம், கிளிநொச்சி பகுதிகளை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஊடவியலாளர்கள்...

முன்பாக வடக்கு ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் அரசியல்வாதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் பங்கேற்றனர்.

கடந்த வியாழக்கிழமை ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின்மீது இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றனர். இதில், மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி மற்றும் பொருட்கள் எரயூட்டப்பட்டன.

இந்த சம்பவத்தை கண்டித்தும் நீதியான விசாரணைகளை முன்னெடுத்து, உண்மை குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும் என்று கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்தது. (ஐ)

## தீவிர...

மாட்டார். உடல்நிலை மற்றும் அரசியலில் ஈடுபடுவதற்காக நாடு முழுவதும் பயணம் செய்வ தால் ஏற்படும் சிரமங்களை அடிப்படையாகக் கொண்டே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

எனினும், அவர் வரும் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியின் வெற்றிக்காக வியூகம் அமைப்பதிலும் பிரசாரங்களிலும் ஈடுபடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஆனைக்கோட்டை...

இலங்கையின் பெருங்கற்கால பண்பாட்டுக்கு உரியதாக அடையாளம் காணப்பட்டுள்ள ஆனைக்கோட்டையில் ஒரு பகுதியில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தப் பகுதியில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர்களான இரகுபதி, இந்திரபாலா ஆகியோர் 1980ஆம் ஆண்டுகளில் முன்னெடுத்த அகழ்வாய்வு மற்றும் மேலாய்வுகளில் இது பெருங்கற்கால பண்பாடு என உறுதிப்படுத்தும் வகையில் சான்றுப் பொருட்கள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இந்த நிலையில் புலம்பெயர்ந்தோரின் நிதிப் பங்களிப்புடன் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், தென்னிலங்கை தொல்லியல்துறை பேராசிரியர்கள், யாழ். பல்கலைக்கழக தொல்லியல்துறை விரிவுரையாளர்கள், தொல்லியல் பணிமனை அதிகாரிகள், யாழ்ப்பாண மரபுரிமை மையம் இந்த அகழ்வுகளில் பங்கெடுக்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இன்று...

திருகோணமலைக்கும் செல்வார் என்று தெரிய வருகின்றது. திருகோணமலையில் இந்திய அரசாங்கத்தின் முதலீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை ஜெய்சங்கர் ஆய்வு செய்வார். அத்துடன், எதிர்காலத்தில் இந்திய அரசாங்கம் முன்னெடுக்க உத்தேசித்துள்ள திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடல்களை நடத்துவார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உட்பட அரசாங்கத்தின் உயர் மட்ட தலைவர்களுடனும் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கொண்ட தமிழ்த் தேசிய கட்சிகளுடனும் கலந்துரையாடலை நடத்தவுள்ளார் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பொலிகண்டியில் மீனவர்கள் இறங்குதுறையின்றி அவலம்!

## சபையில் சுட்டிக்காட்டினார் எதிர்க்கட்சித் தலைவர்



கொழும்பு, ஜூன் 20

**யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை, பொலிகண்டி என்ற இடத்தில் அதிகளவான மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். என்றாலும் மீன்பிடி படகுகளுக்கு நங்கூரமிடும் வசதிகள் சரியாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த இடத்தை ஆழமாக்கி மீன்பிடி படகுகளை நங்கூரமிடுவதற்குக்கான வசதிகள் செய்து தரப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டாலும், அது இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

எனவே இவ்விடயம் தொடர்பில் பொறுப்பான அமைச்சர் கவனம் செலுத்தி குறித்த பணிகளை துரிதமாக முன்னெடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.

2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டதன் மூலம் இலங்கைக் கடற்பரப்பில் இழுவை மடி மூலம் மீன்பிடியில் ஈடுபடுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் மீன் வளத்திற்கும், கடற் சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் நிலைமைகள் ஏற்படுகின்றன.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இழுவை மடியை நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், யாழ்ப்பாணத்தில் இது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கடற்றொழில் திணைக்களம் மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு அறிவித்தாலும் இதற்கு தீர்வு காணப்படவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இழுவை மடி மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு கேள்வி எழுப்பினார்.

இது குறித்து மீன்பீடித்துறை அதிகாரிகள் மௌனம் காப்பது ஏன் என்ற பிரச்னையும் எழுகிறது. அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டிருக்குமானால் அது கடற்றொழில் சட்டத்தை மீறிய செயலாகும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (அ)

# மக்கள் போராட்ட முன்னணி உதயம்!



கொழும்பு, ஜூன் 20

'மக்கள் போராட்ட முன்னணி' என்ற பெயரில் எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு புதிய கூட்டணியொன்று நேற்று உருவாக்கப்பட்டுள்ளது.

போராட்டக் களத்தில் இருந்த தரப்பினர், சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் சில இதனுடன் இணைந்துள்ளன.

அதனடிப்படையில், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளரும் மக்கள் போராட்டக்கள அமைப்பின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான வசந்த முதலிகே, மாற்றத்திற்கான இளைஞர் அமைப்பின் செயலாளர் லஹிரு வீரசேகர, மக்கள் பேரவைக்கான அமைப்பின் சட்டத்தரணி நுவான் போபகே, ஊடகவியலாளர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் தரிந்து உடுவரகெதர உள்ளிட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், முன்னிலை சோசலிசக் கட்சி, புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி, சோசலிச மக்கள் கூட்டமைப்பு ஆகியனவும் இதனுடன் இணைந்துள்ளன. (அ)

# ஜூன் 26ஆம் திகதி ஆசிரியர்கள் சுகயீன விடுமுறைப் போராட்டம்

கொழும்பு, ஜூன் 20

எதிர்வரும் 26ஆம் திகதி சுகயீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

உறுதியளித்தபடி கோரிக்கைகளை வழங்க நடவடிக்கை எடுக்காவிட்டால் சாதாரண தர மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் இருந்து விலக நேரிடும் என அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஆசிரியர்கள் தொழில்சார் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், தற்போதைய சந்ததியினர் அதனை பொருட்படுத்தாமல் தமது கல்வித் தேவைகளை பூர்த்தி செய்து வருவதாக அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த வைபவமொன்றில் தெரிவித்தார்.

இதேவேளை, சம்பளப் பிரச்னை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் சாதகமாக அமைந்துள்ளதாக பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு தெரிவித்துள்ளது.

சம்பளப் பிரச்னைக்கு உரிய தீர்வை வழங்குவதற்கு அதிகாரிகளுக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்படும் என அதன் இணைத் தலைவர் தம்மிக்க பிரியந்த தெரிவித்தார். (அ)

# எதிர்க்கட்சி தலைவர் சஜித்தின் கோரிக்கை குறித்து அவதானம்!

## அமைச்சர் டக்ளஸ் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

யாழ். மாவட்ட மீனவர்களுக்கு இறங்குதுறை கேட்டு இதுவரை யாரும் கோரிக்கை விடுக்கவில்லை. என்றாலும் எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப் பேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச யாழ்.மாவட்ட மீனவர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்னைகள் தொடர்பாக முன்வைத்த கேள்விகளுக்கு பதில ளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் மீதான எதிர்க்கட்சித் தலைவரின் அக்கறைக்கு நன்றி தெரிவிக்கிறேன். அந்த மீனவர்கள் இறங்கு துறையொன்று கேட்டிருப்பதாக உங்களின் கேள்வி அமைந்திருந்தது.

அது தொடர்பான கோரிக்கை இதுவரை என்னிடம் விடுக்கப்பட வில்லை. வான் தோண்டுவது தொடர்பிலேயே கேட்டிருந்தார்கள். இம்முறை வடக்கு மாகாணத்துக்கு ஜனாதிபதி 500 மில்லியனை ஒதுக்கியுள்ளார். அந்த வகையில் அந்த வான் தோண்டும் வேலைகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப் படும்.

இதேவேளை இழுவை மடி வலை தொடர்பாக 2018 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் சட்டம் தனிநபர் பிரேரணையாக கொண்டு வரப்பட்டு அதனை பின்னர் கடற்றொழில் அமைச்சு பொறுப் பேற்றுக் கொண்டது.

கடற்றொழிலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தமையால் நாரா நிறுவனத் தின் ஆய்வுக்கு பின்னர் எந்தெந்த பகுதிகளில் செய்யலாம் என்று கூறி தீர்மானிக்கப்பட்டதுடன் அந்த இடங்களில் மென் இழுவை வலைக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும் வழங்கப்படவில்லை. இருந்தும் உங்களின் கேள்வியை கருத்திலெடுத்து மீளாய்வு செய்கின்றேன் - என்றார். (அ)

# கடன் சீரமைப்பு குறித்து சீனாவுடன் இலங்கை பீஜிங்கில் கலந்துரையாடல்

கொழும்பு, ஜூன் 20

கடன் மறுசீரமைப்பு குறித்து இலங்கையும் சீனாவும் பீஜிங்கில் நடைபெற்ற இராஜதந்திர ஆலோசனை சந்திப்பொன்றின்போது கலந்துரையாடியுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான 13ஆவது சுற்று தூதரக ஆலோசனைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் சீன வெளிவிவகார பிரதி அமைச்சர் சன் வீடோங் ஆகியோர் தலைமையில் இந்த ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

அண்மைய ஒத்துழைப்பு செயற்பாடுகள், பொருளாதாரம், வர்த்தக மேம்பாடு, கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலான ஒத்துழைப்பை இரு தரப்பினரும் இதன்போது ஆராய்ந்துள்ளனர்.

சவாலான காலகட்டத்தில் இலங்கைக்கு சீனா வழங்கிய உதவிகளுக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

# 1400 கோடி ரூபா செலவில் இந்தியாவில் குளிர்பான நிறுவனம் அமைக்கும் முரளி

கொழும்பு, ஜூன் 20

இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் கர்நாடக மாநிலம் சாமராஜநகரா மாவட்டத்தில் உள்ள படன குப்பேயில் குளிர்பானங்கள் மற்றும் தின்பண்டங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் 1,400 கோடி இந்திய ரூபா முதலீடு செய்ய உள்ளதாக கர்நாடக தொழில்துறை அமைச்சர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் பற்றி அவருடன் முரளிதரன் கலந்துரையாடியுள்ளதாக தனது எக்ஸ் தளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில், இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முரளிதரன் குளிர்பானங்கள் மற்றும் தின்பண்டங்கள் தயாரிக்கும் நிறுவனம் அமைக்க திட்டமிட்டுள்ளார்.

இதற்காக ஆரம்பத்தில் 230 கோடி ரூபா முதலீட்டில் திட்டமிடப்பட்ட இந்த திட்டம், தற்போது மொத்தம் 1,000 கோடியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் 1,400 கோடியாக உயர்த்தப்படும். இந்த திட்டத்திற்காக ஏற்கனவே 46 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிறுவனத்துக்கான உற்பத்தி நடவடிக்கைகள் அடுத்த ஆண்டு ஜனவரியில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், முரளிதரன் எதிர்வரும் காலங்களில் தார் வாட்டில் மற்றொரு பிரிவையும் தொடங்க திட்டமிட்டுள்ளார் என குறித்த பதிவில் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# சவூதி அரேபியாவில் பணியாற்றும் வீட்டுப் பணிப் பெண் சித்திரவதை!

சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்ணாகப் பணிபுரியும் இலங்கைப் பெண் ஒருவர் தனது சேவைக் காலம் முடிவதற்குள் தாம் பணிபுரியும் வீட்டில் குடியிருப்பவர்களால் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளானதால், தம்மை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஹொரவ்பொத்தானை - வில்வாவ பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய இந்த பெண், ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் வீட்டு வேலைக்காக சவூதி அரேபியா சென்றுள்ளார்.

எனினும் தான் பணிபுரியும் வீட்டின் உரிமையாளர்கள் தன்னை பல்வேறு விதங்களில் சித்திரவதை செய்வதாக தொலைபேசியில் தனது குடும்ப உறுப்பினர்களை தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.